உ
சிவமயம்

# சொர்ண தீபம்

அமரர்

## திருமதி. மார்க்கண்டு சொர்ணலட்சுமி

அவர்களின்
சிவபதப்பேறு குறித்த 31ம் நாள்
நினைவுகளுடன் மலரும்

# நினைவு மலர்


**02.05.2025**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



வவுனியா குடியிருப்பைப் பிறப்பிடமாகவும் புளியங்குளம், குருமன்காடு ஆகியவற்றை வாழ்விடமாகவும் கொண்டு வாழ்வாங்கு வாழ்ந்து அமரத்துவமடைந்த

# அமரர்
# திருமதி. மார்க்கண்டு சொர்ணலட்சுமி

அவர்களின்
சிவபதப்பேறு குறித்த 31ம் நாள்
நினைவுகளுடன் மலரும்

# "சொர்ண தீபம்"

## 02.05.2025

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | விநாயகர் துதி | 03 |
| 2. | வாழ்க்கை வரலாறு | 05 |
| 3. | பஞ்சபுராணம் | 11 |
| 4. | காரிய சித்திமாலை | 13 |
| 5. | விநாயகர் அகவல் | 16 |
| 6. | சிவபுராணம் | 19 |
| 7. | திருவெம்பாவை | 23 |
| 8. | கௌரிக்காப்பு | 29 |
| 9. | கந்தசஷ்டி கவசம் | 32 |
| 10. | சகலகலாவல்லி மாலை | 40 |
| 11. | அபிராமி அம்மை பதிகம் | 43 |
| 12. | மகிஷாசுரமர்த்தினி ஸ்லோகம் | 48 |
| 13. | ஸ்ரீ ஆஞ்சநேய கவசம் (அனுமன் கவசம்) | 53 |
| 12. | திருப்பொற்சுண்ணம் | 55 |
| 13. | பட்டினத்தார் அருளிய உடற்கூற்று வண்ணம் | 60 |
| 14. | பட்டினத்தார் பாடல்கள் | 63 |
| 15. | கோளறு திருப்பதிகம் | 65 |
| 16. | நவக்கிரக துதி | 68 |
| 17. | வாழ்த்து | 70 |
| 19. | வீட்டின் நீள அகல பலன்கள் | 71 |
| 20. | நன்றி நவிலல் | 72 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



அன்னை மடியில்
**19.08.1937**

ஆண்டவன் அடியில்
**02.04.2025**

வவுனியா குடியிருப்பைப் பிறப்பிடமாகவும் புளியங்குளம், குருமன்காடு ஆகியவற்றை வாழ்விடமாகவும் கொண்டு வாழ்வாங்கு வாழ்ந்து அமரத்துவமடைந்த

## அமரர்
# மார்க்கண்டு சொர்ணலட்சுமி

அவர்களின்

சிவபதப்பேறு குறித்த

## திதி நிர்ணய வெண்பா

ஆண்டு குரோதி இருபதாம்நாள் பங்குனியில்
பூண்ட வளர்பிறைப் பஞ்சமியில் - மாண்பாய்
வவுனியா பெற்றசொர்ண லட்சுமியை ஈசன்
சிவன்தன்தாள் சேர்த்தனைத்தான் சீர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# விநாயகர் துதி



ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்று கின்றேனே.

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து.

திருவாக்குஞ் செய்கருமங் கைகூட்டுஞ் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் – உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனைமு கத்தானைக்
காதலாற் கூப்புவார்தம் கை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சமர்ப்பணம்

எம்மைப் பாசத்துடன் அரவணைத்து

வளர்த்து ஆளாக்கி நல்வாழ்வு அமைத்து

இவ்வையகத்தில்

சிறப்பாக வாழ வைத்து

இறைபதமடைந்த

எங்கள் அன்னையே!

உங்கள் பொற்பாதமதில்

இந்நினைவு மலரைச்

சமர்ப்பிக்கின்றோம்

*ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!*

**என்றும் பணிவுடன்**

**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் திருமதி. மார்க்கண்டு சொர்ணலட்சுமி

அவர்களின்

# வாழ்க்கை வரலாறு

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்"

என்னும் வள்ளுவனின் வாக்கிற்கு அமைய வாழ்ந்து, தனது 87ஆவது வயதில் விண்ணுலகு அடைந்த எங்கள் அன்புத் தாயார் திருமதி சொர்ணலட்சுமி மார்க்கண்டு அவர்களின் சிவபதப்பேறு குறித்த நினைவேட்டில் அவரின் வாழ்க்கை வரலாற்றைப் பதிவுசெய்வதில் மனநிறைவடைகின்றோம்.

வாரித்தம்பி முருகேசுவும், வேதவனம் பறுவதமும் இணைந்து நடத்திய இனிய இல்வாழ்க்கையின் பயனாக, அவர்களின் கடைசி மகளாக 1937.08.19 அன்று சொர்ணலட்சுமி குடியிருப்பு,வவுனியாவில் பிறந்தார். இவரது மூத்த சகோதரிகள் சிவபாக்கியம் (திருகோணமலை), சீவரத்தினம் இறம்பைக்குளம்),சகோதரன் கந்தசாமி (குடியிருப்பு) ஆகியோரின் இளைய சகோதரியாக வளம்மிகுந்த வவுனியாவின் குடியிருப்பு இல்லத்தில் இவரது இளமைப்பருவம் கழிந்தது.வற்றாது அருள்புரியும் குடியிருப்பு சித்தி விநாயகர் கோயிலும், அதன் அருகே அமைந்திருந்த தாமரைப் பொய்கையும் இவரது இளமைப் பருவத்தை இனிமையாக்கியிருந்தன.

இவர் தனது 6 வயதில் தந்தையை இழந்தாலும் தாய், தமையனது அரவணைப்பில் கல்வியைத் தொடங்கினார். வவுனியா நகரில் உள்ள C.C.T.M. பாடசாலை இவரது ஆரம்பக் கல்விக்கு வழிகாட்டியாக அமைந்து, நற்பண்புகளை வளர்த்தெடுத்த கல்வி நிறுவனமாகும்.தொடர்ந்து இடைநிலைக் கல்வியைக் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் ஆங்கில மொழி மூலம் பயின்றார். பாடசாலைக் காலத்திலேயே தையற்கலையில் மிகுந்த தேர்ச்சி பெற்றார். இக்கலை பிற்காலத்தில் இவருக்கு வருமானத்தை ஈட்டித்தந்த ஒன்றாக மாறியதை நாம் அறிவோம். கல்வி கற்றுக் கொண்டிருந்த காலத்திலேயே இவரது தாய்மாமன் கணபதிப்பிள்ளை – தையல்நாயகத்தின் மகனான மார்க்கண்டுவைத் திருமணம் செய்து கொண்டார். திருமணத்தைத் தொடர்ந்து சரசாலையில் சில வருடங்கள், தன் கணவரது வீட்டில் இனிதே வாழ்கையை நடத்தி வந்தார். இவரது கணவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாவகச்சேரி தபால் நிலையத்தில். பணியாற்றிக் கொண்டிருந்தார். இக்காலப் பகுதியில் இவர்களுக்கு மூத்த மகளான பாமதி பிறக்கின்றார். பின்னர் கணவன் மலைநாடு றோசாலை - கற்றனுக்கு பணி இடமாற்றம் பெற்றுச் செல்ல இவர் மாமியாருடன் சரசாலையில் வாழ்ந்து வந்தார். தொடர்ந்து, போக்குவரத்து வசதிகள் கருதி, வவுனியா குடியிருப்பில் குடியேறினார்கள். தாய்மனையாகிய குடியிருப்பில் 2ஆவது மகள் ரேவதியையும், 3 ஆவது மகள் சுகந்தியையும் பெற்றெடுத்தார்கள். இக்காலத்தில் இவரது கணவன் றோசாலை - கற்றனிலிருந்து, வவுனியா - புளியங்குளத்திற்கு இடமாற்றம் பெற்று வந்தார்.

1962ம் ஆண்டில் புளியங்குளம் புகையிரத நிலைய வீதியில் வாழ்மனையை அமைத்து வாழ்க்கையைத் தொடங்குகிறார்கள். புளியங்குளம் பாடசாலை, முருகன் கோயில் ஆகியவற்றில் தொண்டுப் பணிகளில் ஈடுபட்டு வந்த கணவருக்கு உறுதுணையாக இருந்து, ஊர் மக்களுடன் நல்லுறவைப் பேணி வந்தார். எல்லோரும் மார்க்கண்டு மாமா, மார்க்கண்டு மாமி என அன்போடு இவர்களை அழைப்பார்கள். இக்காலகட்டத்தில் தேவகி, வாசுகி ஆகிய இரட்டை மகள்களைப் பெற்றெடுத்தார்கள். தொடர்ந்து சியாமளா, நந்தினி ஆகிய மகள்மார் பிறந்தார்கள்.

புளியங்குளம் வாழ்க்கை இவருக்குப் பல புதிய அனுபவங்களைப் பெற்றுத் தந்தது. கோழி, மாடு வளர்ப்பு, நெல்வயல்கள் மூலம் பெறும் வருமானம், கணவரின் அரச பணிக்கான வருமானம் ஆகியவற்றால் வாழ்வில் பணப்பிரச்சனை பெரிதாக இருக்கவில்லை. இவரது தையற் கலையின் பெருமையறிந்த பல அயற்கிராமத்தவர்கள் இவரை நாடி வரத்தொடங்கினார்கள். பத்திரிகைகள் வாசித்தல் இவருக்கு விருப்பமானதொன்றாகும். கல்கி, குமுதம், ஆனந்தவிகடன், ராணிமுத்து, போன்ற இந்திய சஞ்சிகைகளைப் புதிதாகவோ, இரவலாகவோ வாங்கி வாசிக்கத் தவற மாட்டார். வவுனியா சென்றுவரும்போது கதைப் புத்தகங்களுடன் வருவார். வாசிப்பு என்பது இறக்கும்வரை இவருடன் கூடவந்த ஒன்றாகும்.

அயலவர்களுடன் கண்ணியமான நட்பினைப் பேணி வந்தார். பிள்ளைகள் பாடசாலையில் கல்விகற்கும் காலத்தில் கணவருடன் இணைந்து நின்று, அவர்களது கல்விக்கு வழிகாட்டியவர். பிள்ளைகள் கல்வியில் உயர்ந்து, நற்பண்புகள் உள்ளவர்களாக வளர வேண்டும் என்பதில் உறுதியோடு நின்றவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரது 40 வயதில் தன் அன்னையை இழந்தார். இவரது 45ஆவது வயதில், இவரின் கணவர் சிறுநீரக செயலிழப்பு காரணமாக மரணமடைந்தார். கணவரின் மரணம் இவரை நிலைகுலைய வைத்தது. அந்நேரம் இவரது மூத்த மகள் பாமதிக்கு வயது 26, இரண்டாவது மகள் ரேவதி ஆசிரியத் தொழில் பெற்று 1 மாதம் பூர்த்தியாகாத நிலை. 3வது மகள் சுகந்தி யாழ்.பல்கலைக்கழகத்தில் இரண்டாம் வருட மாணவி. 4ம் 5ம் மகள்மார் தேவகியும் வாசுகியும், க. பொ. த உயர்தர வகுப்பு இரண்டாம் வருட மாணவியர். 6வது மகள் சியாமளா க. பொ.த.சாதாரண வகுப்புத் தேர்வெழுத ஆயத்தமாகிக் கொண்டிருந்தார். கடைசி மகள் நந்தினி 11 வயதே நிரம்பியவர்.

தந்தையின் இழப்பைத் தொடர்ந்து, இவர்கள் எவ்வாறு வாழ்க்கையைக் கடந்து செல்லப் போகிறார்கள் என்ற வினா பலருக்கும் ஏற்பட்டது. அன்னை மன வைராக்கியத்துடன் பிள்ளைகளை வளர்த்தார். இங்கு மூத்த மகளான பாமதியின் பங்களிப்பை முக்கியமாகக் குறிப்பிடவேண்டும். இவர் இளையோர்களுக்குப் பாடம் கற்பித்துப் பெற்ற வருமானம், வீட்டின் பொருளாதாரத் தேவைகளுக்குப் பெரிதும் உதவியது.அத்தோடு இவர் தன் இளைய சகோதரிகளின் கல்வியில் மிகுந்த அக்கறை கொண்டு அவர்களை வழிநடத்தினார். இரண்டாவது மகள் ரேவதி ஆசிரியத் தொழிலால் பெற்ற வருமானமும், எங்கள் தந்தையின் ஓய்வூதியப் பணம் வரும்வரை எங்களுக்கு மிக முக்கியமான ஒன்றாக இருந்தது.

தன்பிள்ளைகளைக் கல்வியில் உயர்ந்தவர்களாக உருவாக்கிச் சமூகம் போற்றும் அளவிற்கு வளர்க்க வேண்டும் என்ற எண்ணத்தில் அன்னை மிகவும் உறுதியாக இருந்தார்.

தன் மகள்மார் ரேவதி, சுகந்தி, தேவகி, வாசுகி ஆகியோரைப் பல்கலைக்கழகப் பட்டதாரிகளாக்கி மகிழ்ந்தவர். மகள் ரேவதி புளியங்குளம் இந்துக்கல்லூரியில் ஆசிரியராகி, அதிபராக உயர்வு பெற்றதையும் கனகராஜன்குளம் மகாவித்தியாலயத்தில் அதிபராகப் பணியாற்றியதையும் கண்டு மகிழ்ந்தவர். மகள் சுகந்தி புளியங்குளத்தின் முதலாவது பட்டதாரி என்ற பெருமையோடு, புளியங்குளம் இந்துக்கல்லூரியில் ஆசிரியராகப் பணியாற்றிக் கொண்டிருக்கும் போதே தொலைக்கல்வி ஆசிரிய ஆலோசகராகவும் பணியாற்றினார். பின் கனடா நாட்டிற்கு இடம்பெயர்ந்து டொரோண்டோ கத்தோலிக்கக் கல்விச்சபையில் இணைந்து ஆசிரியராகப் பணியாற்றி வருகிறார். மகள் தேவகி கிளிநொச்சி புனித திரேசா மகளிர் கல்லூரியில் பட்டதாரி ஆசிரியராக நியமனம் பெற்றார். தொடர்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வவுனியா மத்திய மகா வித்தியாலயத்தில் பணியாற்றினார். ஆசிரியப் பணியின்போதே அரசியல் விஞ்ஞான வளவாளராகவும் பணியாற்றினார். பின்னர் கனடா நாட்டிற்கு இடம்பெயர்ந்து டொரோண்டோ கத்தோலிக்கக் கல்விச்சபையில் ஆசிரியராகப் பணியாற்றி வருகின்றார். மகள் வாசுகி கனகராயன்குளம் மகா வித்தியாலயத்தில் பட்டதாரி ஆசிரியராக நியமனம் பெற்றார். தொடர்ந்து பிரதி அதிபராகத் தரணிக்குளம் கணேசா வித்தியாலயத்தில் பணியாற்றினார்.

மகள் சியாமளா வவுனியா கூட்டுறவுத் திணைக்களத்தில் பணியாற்றிக் கொடிருக்கும் போது கனடா நாட்டிற்கு இடம்பெயர்ந்தார். அங்கு பிரபல நிதி நிறுவனமான CIBC யில் முக்கிய பதவியிலிருந்து பணியாற்றி வருகின்றார். கடைசி மகள் நந்தினி மதியாமடு விவேகானந்தா வித்தியாலயத்தில் ஆசிரியராகப் பணியாற்றிய பின், திருமண பந்தத்தில் இணைந்து, சுவிற்சலாந்து நாட்டிற்கு இடம்பெயர்ந்தார். அன்னை தன் பிள்ளைகளோடு பணியாற்றியவர்களுடன் நல்லுறவைப் பேணி, **"இரும்புப்பெண்"** என்ற பாராட்டுதலையும் பெற்றுவந்தார்

நிமிர்ந்த நன்னடை, நேர்கொண்ட பார்வை, எதற்கும் தலைகுனியாத தன்மை, வாக்கினிலே தெளிவு, நேர்மை என்பதெல்லாம் அன்னையின் அடையாளங்கள். ஊரிலுள்ள பலரும் இவர்தம் குடும்பத்தை, அன்னையின் வளர்ப்புமுறையை உதாரணமாகக் கூறித் தங்கள் பிள்ளைகளை வளர்த்ததும் உண்டு. இடப்பெயர்வு வேளைகளில் ஊரூராய் அலைந்து திரிந்தாலும் இம்மியும் கலங்காத நெஞ்சுரத்துடன் தன் பிள்ளைகளைக் காத்தவர். புதூர், பரந்தன், வட்டக்கச்சி, பாலிநகர் என்று அகதிவாழ்வு வாழ்ந்தபோதும் இவர் தளர்ச்சி அடைந்ததில்லை.

இக்காலப்பகுதிகளில் இவரது மகள்மாரின் திருமணத்தை சிறந்த முறையில் நடத்தி மகிழ்ந்தார். மூத்த மகள் பாமதியை பம்பை மடுவைச் சேர்ந்த திரு.திருமதி.நாகலிங்கம் அவர்களின் மகன் வில்வராஜா அவர்களுக்கும் (தொழிநுட்ப உத்தியோகத்தர் - கமநல சேவைத் திணைக்களம், வவுனியா), இரண்டாவது மகள் ரேவதியை முள்ளியவளையைச் சேர்ந்த திரு. திருமதி சுப்ரமணியம் அவர்களின் மகன் கிருஷ்ணமூர்த்தி அவர்களுக்கும் (கிராம சேவை அலுவலர்) திருமணம் செய்துவைத்து மகிழ்ந்தார். மகள் சுகந்தி கனகராயன்குளத்தைச் சேர்ந்த திரு. திருமதி சுப்ரமணியம் அவர்களின் மகன் யோகேந்திரன் அவர்களைக் கனடா நாட்டில் திருமணம் செய்து அங்கு குடியேறினார். மகள் தேவகி புதுவிளாங்குளம் கனகராயன்குளத்தைச் சேர்ந்த திரு. திருமதி கந்தையா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களின் மகன் விக்னேஸ்வரன் அவர்களைத் திருமணம் செய்து கனடா நாட்டில் குடியேறி வாழ்ந்து வருகின்றார். மகள் சியாமளா கரம்பனைச் சேர்ந்த திரு. திருமதி இராசையா அவர்களின் மகன் மகிந்தன் அவர்களைக் கனடா நாட்டில் திருமணம் செய்து வாழ்ந்து வருகிறார். கடைசி மகள் நந்தினி புளியங்குளத்தைச் சேர்ந்த திரு. திருமதி இராசதுரை தம்பதியரின் மகன் மணிவண்ணன் அவர்களைத் திருமணம் செய்து சுவீட்சலாந்து நாட்டில் வாழ்ந்து வருகிறார்.

இலங்கையில் ஏற்பட்ட அசாதாரண நிலையைத் தொடர்ந்து ஏற்பட்ட இடப்பெயர்வுகளால் இவரது குடும்பமும் பாதிக்கப்பட்டது. இவரது புகையிரத நிலைய வீதியில் அமைந்த வீடும். கண்டி வீதியில் அமைந்த வீடமைப்புத் திட்ட வீடும் முற்றாகச் சேதமடைந்ததைத் தொடர்ந்து மகள்மார் ரேவதி வாசுகி ஆகியோருடன் பாலிநகர் வவுனிக்குளத்தில் குடியேறினார். அங்கிருந்து வந்து வவுனியா மத்திய மகா வித்தியாலய ஆசிரியர் விடுதியில் மகள் தேவகியுடன் சிலவருடங்கள் வாழ்ந்தார். அக்காலப்பகுதியில் வவுனியா - குருமன்காட்டில் வீடு கட்டுவதில் பெரும் சிரமங்களை அனுபவித்தார். அவரது அயராத முயற்சியால் உருவானதே அன்னை இறக்கும்வரை வாழ்ந்த குருமன்காட்டு மனையாகும். புதிய சூழலுக்குள்ளே வாழ்ந்தாலும், அயலவர்களுடன் நட்புடன் பழகி அவர்களின் நன்மதிப்பைப் பெற்றுவந்தார்.

இவரது பேரப்பிள்ளைகள் பற்றியும் இங்கு குறிப்பிடலாம் மூத்த பேத்தியான அருந்ததி-வித்யாசாகர் (ஆசிரியர்) ஆரூரன்-ஆத்மிகா (சுங்கத் திணைக்களம்) அபிநயன் (பல்கலைக்கழக மாணவன்) திவ்யன் (தபால் திணைக்களம் - கனடா) திவ்யா (ஆராச்சியாளர் - கனடா), வித்யா (ஆசிரியர் - கனடா) சயானி (மாணவி - கனடா) ஆரணி (பல்கலைக்கழக மாணவி - சுவிட்சலாந்து) சாரணி (மாணவி - சுவிட்சலாந்து) ஆரணன் (மாணவன் - கனடா) பூட்டப்பிள்ளைகள் - ஆதுல்யன், அகவன், அகரா என்போராவர். இவர்தன் பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகளுடன் மிகுந்த பாசமுள்ளவராக இருந்தார். அம்மாவின் நான்கு பிள்ளைகள் வெளிநாடுகளில் வாழ்ந்தாலும், வருடந்தவறாமல் மாறிமாறி வந்துநின்று அன்னைக்குப் பணிசெய்து வந்தனர்.

இவரது மகள் வாசுகியின் பணி மிகவும் போற்றுதலுக்கு உரியது. ஒரு குழந்தையைப் பராமரிப்பதுபோல அருகிருந்து அன்னையின் தேவைகளை நிறைவேற்றி வந்தார். கடந்த 3 வருடங்களாக உணவு, உறக்கம் மறந்து அன்னைக்குப் பணிசெய்வதே தனது முக்கிய கடமையென வாழ்ந்து வந்தார். இறுதி நேரங்களில் வாசு, வாசு என்ற சொல்லையே அன்னையின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய் கூறிக்கொண்டிருந்தது. இவருக்கு உதவியாக மகள்மார் ரேவதி, பாமதி ஆகியோரும் அவர்களது கணவன்மார் முறையே கிருஷ்ணமூர்த்தி, வில்வராஜா ஆகியோரும் இருந்து வந்தார்கள் .அம்மாவின் பாசம்மிக்க மருமக்களாக இவர்கள் இருவரும், அவரால் பாராட்டுப் பெற்றார்கள். பெற்ற மகன்களைப் போல் உரிமையுடன் எங்கள் அன்னையைக் காத்து வந்தனர்.

அம்மாவின் உயிர்பிரியும் வேளையில் கடைசித் தண்ணீர் கொடுக்கும் பாக்கியம் பெற்ற மகள் வாசுகி, மகள் ரேவதி சிவபுராணம் பாடி வழியனுப்பிய மகள் பாமதியும், கூட நின்ற மருமக்கள் வில்வராஜா, கிருஷ்ணமூர்த்தி, மணிவண்ணன் ஆகியோரும் அவரது இறுதிப் பயண வரலாற்றில் இடம்பெறுகிறார்கள், அன்னை நினைவை இழக்கமுன், வெளிநாட்டிலிருந்து அவருடன் கடைசியாகக் கதைத்த மருமகன் யோகேந்திரனும் மகள் சுகந்தியும் பேறுபெற்றவர்கள். வெளிநாட்டில் இருந்தாலும் மகள்மார் தங்கள் தாயின் கடைசி நேரத்தில் அவருடன் கூட இருக்கவேண்டுமென எண்ணி அவர்களை உடனே . தாயகத்துக்கு அனுப்பிவைத்த மருமக்கள் யோகேந்திரன், விக்னேஸ்வரன், மகிந்தன் ஆகியோரின் செயலும் உயர்வானதே.

இவர்தன் கணவனை இழந்த நிலையிலும் ஏழு பிள்ளைகளுக்கும் சிறந்த முறையில் கல்வி புகட்டி அவர்கள் அடைந்த உயர்பதவிகளைக் கண்டும், அவர்களுக்கான சிறந்த வாழ்க்கைத் துணைவர்களைத் தேடிக்கொடுத்தும், அவர்களின்நேரிய வாழ்வைக்கண்டும் மகிழ்ந்திருந்தவர். இறுதி அஞ்சலி உரையில், வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய ஆசிரியர் திரு. கதிர்காமசேகரம் குறிப்பிட்டது போல் **"சிங்கப்பெண்"** ஆக வாழ்ந்து இறைவனடி சேர்ந்தார்.

ஏழு பெண்பிள்ளைகளும் ஒன்றாகச் சேர்ந்து நின்று அன்னையைக் கண்ணீருடன் வழியனுப்பி வைத்தோம். எங்களது சோகத்தைக் காலம் தீர்த்து வைக்கும் என்ற நம்பிக்கையோடு அவரின் ஆன்ம ஈடேற்றத்துக்காகப் பிரார்த்திப்போம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

**மகள்மார், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# பஞ்சபுராணம்

திருச்சிற்றம்பலம்

## தேவாரம்

அப்பன்நீ அம்மைநீ ஐய னும்நீ
அன்புடைய மாமனும் மாமி யும்நீ
ஒப்புடைய மாதரு மொண்பொரு ளும்நீ
ஒருகுலமுஞ் சுற்றமும் ஓரூ ரும்நீ
துய்ப்பனவும் உய்ப்பனவுந் தோற்று வாய்நீ
துணையாயென் நெஞ்சந் துறப்பிப் பாய்நீ
இப்பொன்நீ இம்மணிநீ இம்முத் தும்நீ
இறைவன்நீ ஏறூர்ந்த செல்வன் நீயே.

## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்தஆ ரமுதே
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் றனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெரு மானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

## திருவிசைப்பா

நீறணி பவளக் குன்றமே! நின்ற
நெற்றிக்கண் உடையதோர் நெருப்பே!
வேறணி புவன போகமே! யோக
வெள்ளமே! மேருவில் வீரா!
ஆறணி சடையெம் அற்புதக் கூத்தா
அம்பொன்செய் அம்பலத் தரசே!
ஏறணி கொடியெம் ஈசனே, உன்னைத்
தொண்டனேன் இசையுமாறு இசையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

நிட்டையி லாஉடல் நீத்தென்னை ஆண்ட
நிகரிலா வண்ணங்களும்
சிட்டன் சிவனடி யாரைச்சீ ராட்டுந்
திறங்களு மேசிந்தித்
தட்டமூர்த் திக்கென் அகம்நெக ஊறும்
அமிர்தினுக் காலநிழற்
பட்டனுக் கென்னைத்தன் பாற்படுத் தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

வேதநாயகனே போற்றி விண்ணவர் தலைவா போற்றி
மாதொரு பாகா போற்றி மறு சமயங்கண்மாளப்
பேதகஞ் செய்வாய் போற்றி பிஞ்ஞகா போற்றி போற்றி
பாதகமனைத்துந் தீர்க்கும் பராபரா போற்றி போற்றி.

## திருப்புகழ்

உம்பர்தருத் தேநுமணிக் – கசிவாகி
ஒண்கடலிற் றேனமுதத் – துணர்வூறி
இன்பரசத் தேபருகிப் – பலகாலும்
என்றனுயிர்க் காதரவுற் – றருள்வாயே
தம்பிதனக் காகவனத் – தணைவோனே
தந்தைவலத் தாலருள்கைக் – கனியோனே
அன்பர்தமக் கானநிலைப் – பொருளோனே
ஐந்துகரத் தானைமுகப் – பெருமாளே.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காரியசித்திமாலை



திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொல்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் உருவாக்கும்
ஆதலால் வானோரும் யானை முகத்தானைக்
காதலால் கூப்புவர்தம் கை.

சகல காரியங்களிலும் சித்தி பெற யானைமுகத்தானைத் துதித்து இந்தப் பாடலைப் பாடினால் ஒருவர் தான் எடுத்த காரியம் எளிதில் நிறைவேறும்.

இந்தக் காரிய சித்தி மாலையைக் காலை, மதியம், மாலை மூன்று வேளைகளிலும் விநாயகரை எண்ணி எட்டுநாட்கள் பாடுபவர்கள் நினைத்த காரியம் சித்திக்கும். சதுர்த்தி விரத தினத்தன்று எட்டுமுறை பாடினால் எட்டுச் சித்திகளும் கைகூடும்.

பந்தம் அகற்றும் அநந்தகுணப் பரப்பும்
எவன்பால் உதிக்குமோ
எந்த உலகும் எவனிடத்தில் ஈண்டி
இருந்து கரக்குமோ
சந்தமறை ஆகமங் கலைகள் அனைத்தும்
எவன்பால் தகவருமோ
அந்த இறையாம் கணபதியை
அன்புகூறத் தொழுகின்றாம். 1



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகமுழுதும் நீக்கமற ஒன்றாய்
நிற்கும் பொருள் எவன் அவ்
உலகிற் பிறக்கும் விகாரங்கள்
உறாதமேலாம் ஒளியாவன்
உலகம் புரியும் வினைப்பயனை
ஊட்டும் களைகண் எவன் அந்த
உலக முதலைக் கணபதியை
உவந்து சரணம் அடைகின்றாம் 2

இடர்கள் முழுதும் எவனருளால்
எரிவீழும் பஞ்சென மாயும்
தொடரும் உயிர்கள் எவனருளால்
சுரர்வாழ் பதியும் உறச்செய்யும்
கடவுள் முதலோர்க்கு ஊறின்றி
கருமம் எவனால் முடியும் அத்
தடவுமருப்புக் கணபதி பொன்
சரணம் சரணம் அடைகின்றாம் 3

மூர்த்தியாகித் தலமாகி முந்நீர்
கங்கை முதலான
தீர்த்தமாகி அறிந்தறியாத்
திறத்தினானும் உயிர்க்கு நலம்
ஆர்த்திநாளும் அறியாமை அகற்றி
அறிவிப்பான் எவன் அப்
போர்த்த கருணைக் கணபதியைப் புகழ்ந்து
சரணம் அடைகின்றாம். 4

செய்யும் வினை முதல்யாவன்
செய்யப்படும் அப்பொருள் யாவன்
ஐயமின்றி உளதாகும் அந்தக்
கருமப் பயன் யாவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உய்யும் வினையின் பயன் விளைவில்
ஊட்டி விடுப்பான் எவன் அந்தப்
பொய்யில் இறையைக் கணபதியைப்
புரிந்து சரணம் அடைகின்றாம் 5

வேதம் அளந்தும் அறிவரிய
விகிர்தன் யாவன் விழுத்தகைய
வேத முடிவில் நடம்நவிலும்
விமலன்யாவன் விளங்குபர
நாதமுடிவில் வீற்றிருக்கும் நாதன்எவன்
எண்குணன் எவனப்
போதமுதலைக் கணபதியைப் புகழ்ந்து
சரணம் அடைகின்றாம் 6

மண்ணின் ஓர் ஐங்குணமாகி வதிவான்
எவன் நீரிடை நான்காய்
நண்ணி அமர்வான் எவன் தீயின் மூன்றாய்
நவில்வான் எவன் வளியின்
எண்ணும் இரண்டு குணமாகி இயைவான்
எவன் வானிடை ஒன்றாய்
அண்ணல் எவன் அக்கணபதியை அன்பிற்
சரணம் அடைகின்றாம். 7

பாச அறிவில் பசுஅறிவில்
பற்றற்கரிய பரன்யாவன்
பாச அறிவும் பசு அறிவும்
பயிலப் பணிக்கும் பரன்யாவன்
பாச அறிவும் பசு அறிவும்
மாற்றி மேலாம் அறிவான
தேசன் எவன் அக்கணபதியைத்
திகழச் சரணம் அடைகின்றாம். 8



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயகர் அகவல்



சீதக் களபச்செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பலஇசை பாடப்
பொன்னரை ஞாணும் பூந்துகில் ஆடையும்
வன்ன மருங்கில் வளர்ந்தழ கெறிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்
வேழ முகமும் விழங்குசிந் தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியும் இலங்குபொன் முடியுந்
திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதங் கடந்த துரிய மெய்ஞ்ஞான
அற்புதனீன்ற கற்பகக் களிறே
முப்பழம் நுகரும் மூஷிக வாஹன
இப்பொழுதென்னை யாட்கொளவேண்டி
தாயா யெனக்குத் தானெழுந் தருளி
மாயாப் பிறவி மயக்கம் மறுத்து
திருந்திய முதலைந் தெழுத்துந் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தென் னுளந்தனிற்புகுந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருவடி வாகிக் குவலயத் தன்னில்
திருவடி வைத்துத் திரமிது பொருளென
வாடாவகைதான் மகிழ்ந்தெனக்கருளிக்
கோடா யுதத்தால் கொடுவினை களைந்தே
உவட்டாவுபதேசம் புகட்டியென் செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையுங் காட்டி
ஐம்புலன் தன்னை அடக்கும் உபாயம்
இன்புறு கருணையின் இனிதெனக் கருளி
கருவிகள் ஒடுங்கும் கருத்தினையறிவித்து
திருவினை தன்னை அறுத்திருள் கடிந்து
தலமொரு நான்குந் தந்தெனக் கருளி
மலமொரு மூன்றின் மயக்க மறுத்தே
ஒன்பது வாயில் ஒருமந் திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதுங் காட்டி
ஆறா தாரத்து அங்குச நிலையும்
பேறா நிறுத்திப் பேச்சுரை அறுத்தே
இடைபிங் கலையின் எழுத்தறி வித்து
கடையிற் சுழிமுனை காபலமும் காட்டி
மூன்று மண்டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் நாவி லுணர்த்தி
குண்டலி யதனிற் கூடிய வசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து
மூலா தாரத்தின் மூண்டெழு கனலைக்
காலா லெழுப்புங் கருத்தறி வித்தே
அமுத நிலையும் ஆதித்தனியக்கமும்
குமுத சகாயன் குணத்தையுங் கூறி
இடைச்சக் கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற்சக் கரத்தின் உறுப்பையுங் காட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சண்முக தூலமும் சதுர்முக சூட்சமும்
எண்முக மாக இனிதெனக் கருளி
புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரியெட்டு நிலையுந் தெரிசனப் படுத்தித்
கருத்தினிற் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி இனிதெனக் கருளி
என்னை அறிவித்து எனக்கருள் செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்தே
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கிய எந்தன் சிந்தை தெளிவித்து
இருள்வெளி இரண்டுக்கு ஒன்றிட மென்ன
அருள்தரும் ஆனந்தத்து அழுத்திஎன் செவியின்
எல்லை யில்லா ஆனந்தம் அளித்து
அல்லல் களைந்து அருள்வழி காட்டி
சத்தத்தி னுள்ளே சதாசிவங் காட்டி
சித்தத்தி னுள்ளே சிவலிங்கம் காட்டி
அணுவிற் கணுவாய் அப்பாலுக் கப்பாலாய்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்தி
கூடுமெய்த் தொண்டர் குழத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலையறிவித்து
தத்துவ நிலையைத் தந்தெனை யாண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே.

(விநாயகர் அகவல் முற்றிற்று)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணிக்கவாசகர் அருளிய

# சிவபுராணம்



### திருவாசகச் சிறப்பு

தொல்லை யிரும்பிறவிச் சூழுந் தளைநீக்கி
அல்லலறுத் தானந்த மாக்கியதே – எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூ ரெங்கோன்
திருவாசகம் என்னும் தேன்.

நமச்சிவாய வாழ்க! நாதன்றாள் வாழ்க!
இமைப்பொழுது மென்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க!
கோகழி யாண்ட குருமணிதன் தாள்வாழ்க!
ஆகம மாகிநின் றண்ணிப்பான் தாள்வாழ்க!1
ஏகன் அநேகன் இறைவ னடிவாழ்க!

வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க!
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க!
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க!
கரங்குவிவா ருண்மகிழும் கோன்கழல்கள் வெல்க!
சிரங்குவிவா ரோங்குவிக்கும் சீரோன் கழல்வெல்க!

ஈசனடி போற்றி எந்தையடி போற்றி
தேசனடி போற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமலனடி போற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னனடி போற்றி
சீரார் பெருந்துறைநந் தேவனடி போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆராத இன்பம் அருளுமலை போற்றி
சிவனவனென் சிந்தையுள் நின்ற அதனால்
அவனரு ளாலே அவன்றாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணம் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய வுரைப்பன்யான்

கண்ணுதலான் தன்கருணை கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்தும் மண்ணிறைந்தும் மிக்காய் விழங்கொளியாய்
எண்ணிறந் தெல்லை இலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகி
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகி
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்
செல்லா நின்ற இத்தாவர சங்கமத்துள்

எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யவென் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா வெனவோங்கி ஆழந்தகன்ற நுண்ணியனே

வெய்யாய் தணியாய் இயமானன் ஆம்விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞான மில்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே

ஆக்க மளவிறுதி யில்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவா யென்னைப் புகுவிப்பாய் நின்றொழும்பின்
நாற்றத்தி னேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனங்கழிய நின்ற மறையோனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போல
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்க ளேத்த
மறைந்திருந்தா யெம்பெருமான் வல்வினையேன் தன்னை

மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவமென்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல்போர்த் தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோரு மொன்பது வாயிற்குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய

விலங்கு மனத்தால் விமலா உனக்கு
கலந்தவன் பாகிக் கசிந்துள் ளுருகும்
நலந்தா னிலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்

தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனா ரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில் வஞ்சங்கெடப்

பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா வமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதா ருள்ளத் தொளிக்கும் ஒளியானே
நீரா யுருக்கியென் னாருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே

அன்பருக் கன்பனே யாவையுமா யல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி யல்லானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈர்த்தென்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெஞ்ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே

போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய் சொல்லாத நுண்ணுணர்வாய்

மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேயென் சிந்தனையுள்
ஊற்றான வுண்ணா ரமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப
ஆற்றேனெம் மையா அரனேயோ என்றென்று

போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பை கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே.
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே

அல்லற் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானைச் செல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரு மேத்தப் பணிந்து

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# திருவெம்பாவை

திருச்சிற்றப்பம்பலம்



ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள்தடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்மறந்து
போதோர் அமளியின்மேல் நின்றும் புரண்டிங்ஙன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னே என்னே
ஈதேயெம் தோழி பரிசேலோர் எம்பாவாய் 01

பாசம் பரஞ்சோதிக் கென்பாய் இராப்பகல்நாம்
பேசும்போ தெப்போதிப் போதார் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீசி இவையுஞ் சிலவோ விளையாடி
ஏசும் இடமீதோ விண்ணோர்கள் ஏத்துதற்குக்
கூசு மலர்ப்பாதந் தந்தருள வந்தருளும்
தேசன் சிவலோகன் தில்லைச்சிற் றம்பலத்துள்
ஈசனார்க் கன்பர்யாம் ஆரேலோர் எம்பாவாய் 02



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்தன்ன வெண்ணகையாய் முன்வந் தெதிரெழுந்தென்
அத்தன் ஆனந்தன் அமுதன்என் றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
பத்துடையீர் ஈசன் பழஅடியீர் பாங்குடையீர்
புத்தடியோம் புன்மைதீர்த் தாட்கொண்டாற் பொல்லாதா
எத்தோநின் அன்புடைமை எல்லோம் அறியோமோ
சித்தம் அழகியார் பாடாரோ நம்சிவனை
இத்தனையும் வேண்டும் எமக்கேலோர் எம்பாவாய் 03

ஒண்ணித் திலநகையாய் இன்னம் புலர்ந்தின்றோ
வண்ணக் கிளிமொழியார் எல்லாரும் வந்தாரோ
எண்ணிக்கொ டுள்ளவா சொல்லுகோம் அவ்வளவும்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக் கொருமருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உண்ணெக்கு நின்றுருக யாமாட்டோம் நீயேவந்து
எண்ணிக் குறையில் துயிலேலோர் எம்பாவாய் 04

மாலறியா நான்முகனும் காணா மலையினைநாம்
போலறிவோம் என்றுள்ள பொக்கங்க ளேபேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ கடை திறவாய்
ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான்
கோலமும் நம்மைஆட் கொண்டருளிக் கோதாட்டும்
சீலமும் பாடிச் சிவனே சிவனேஎன்று
ஓலம் இடினும் உணராய் உணராய்காண்
ஏலக் குழலி பரிசேலோர் எம்பாவாய். 05

மானேநீ நென்னலை நாளைவந்துங்களை
நானே எழுப்புவன் என்றலும் நாணாமே
போன திசைபகராய் இன்னம் புலர்ந்தின்றோ
வானே நிலனே பிறவே அறிவரியான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தானேவந் தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய்
ஊனே உருகாய் உனக்கே உறும் எமக்கும்
ஏனோர்க்கும் தங்கோனைப் பாடேலோர் எம்பாவாய். 06

அன்னே இவையும் சிலவோ பல அமரர்
உன்னற் கரியான் ஒருவன் இருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய்திறப்பாய்
தென்னாஎன் னாமுன்னம் தீசேர் மெழுகொப்பாய்
என்னானை என்னரையன் இன்னமுதென் றெல்லோமும்
சொன்னோம்கேள் வெவ்வேறாய்இன்னந் துயிலுதியோ
வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியால்
என்னே துயிலின் பரிசேலோர் எம்பாவாய். 07

கோழி சிலம்பச் சிலப்பும் குருகெங்கும்
ஏழில் இயம்ப இயம்பும்வெண் சங்கெங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோம் கேட்டிலையோ
வாழியீ தென்ன உறக்கமோ வாய்திறவாய்
ஆழியான் அன்புடமை ஆமாறும் இவ்வாறே
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
ஏழைபங் காளனையே பாடேலோர் எம்பாவாய். 08

முன்னைப் பழம்பொருட்கு முன்னைப் பழம்பொருளை
பின்னைப் புதுமைக்கும் போர்த்துமப் பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்றஉன் சீரடியோம்
உன்னடியார் தாள் பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே எங்கணவர் ஆவார் அவருகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்ன வகையே எமக்கெங்கோன் நல்குதியேல்
என்ன குறையும் இலோமேலோர் எம்பாவாய். 09



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதாளம் எழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதோர் புனைமுடியும் எல்லாப் பொருள்முடிவே
பேதை யொருபால் திருமேனி ஒன்றல்லன்
வேதமுதல் விண்ணோரும் மண்ணும் துதித்தாலும்
ஓத உலவா ஒருதோழன் தொண்டருளன்
கோதில் குலத்தரன் தன் கோயிற் பிணாப்பிள்ளைகாள்
ஏதவனூர் ஏதவன்பேர் ஆருற்றார் ஆரயலார்
ஏதவனைப் பாடும் பரிசேலோர் எம்பாவாய். 10

மொய்யார் தடம்பொய்கை புக்கு முகேரென்னக்
கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி
ஐயா வழியடியோம் வாழ்ந்தோங்காண் ஆரழல்போற்
செய்யாவெண் ணீறாடி செல்வா சிறுமருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா
ஐயாநீ ஆட்கொண்டருளும் விளையாட்டில்
உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உய்ந்தொழித்தோம்
எய்யாமற் காப்பாய் எமையேலோர் எம்பாவாய். 11

ஆர்த்த பிறவித் துயர்கெடநாம் ஆர்த்தாடும்
தீர்த்தன்நல் தில்லைச்சிற் றம்பலத்தே தீயாடும்
கூத்தன்இவ் வானும் குவலயமும் எல்லோமும்
காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைகள்
ஆர்ப்பரவஞ் செய்ய அணிகுழல்மேல் வண்டார்ப்பப்
பூத்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்
ஏத்தி இருஞ்சுனைநீ ராடேலோர் எம்பாவாய் 12

பைங்குவளைக் கார்மலரால் செங்கமலப் பைம்போதால்
அங்கம் குருகினத்தால் பின்னும் அரவத்தால்
தங்கள் மலங்கழுவ வார்வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவிற் புகப்பாய்ந்து பாய்ந்துநம்
சங்கஞ் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய். 13



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருளா மாபாடிச்
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதி திறம்பாடி அந்தம்ஆ மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி ஆடேலோர் எம்பாவாய். 14

ஒரொருகால் எம்பெருமான் என்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாயோவாள் சித்தங் களிகூர
நீரோருகால் ஓவா் நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால்வந்தனையாள் விண்ணோரைத்தான் பணியாள்
பேரரையற் கிங்கனே பித்தொருவர் ஆமாறும்
ஆரொருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும்வித்தகர்தாள்
வாருருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி
ஏருருவப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய் 15

முன்னிக் கடலைச் சுருக்கி யெழுந்துடையாள்
என்னத் திகழ்ந்தெம்மை ஆளுடையாள் இட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேற்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைக்குலவி நந்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவள்நமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையேலோர் எம்பாவாய். 16

செங்க ணவன்பால் திசைமுகன் பால் தேவர்கள்பால்
எங்கும் இலாததோர் இன்பம்நம் பாலதாக்
கொங்குண் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி
இங்குநம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதம் தந்தருளுஞ் சேவகனை
அங்கண் அரசை அடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலம்திகழப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய். 17



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்ணா மலையான் அடிக்கமலம் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகைவீ றற்றாற்போல்
கண்ணார் இரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணார் ஒளிமழுங்கித் தாரகைகள் தாம்அகலப்
பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கொளிர்சேர்
விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகிக்
கண்ணார் அமுதமுமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணே இப்பூம்புனல்பாய்ந்தாடேலோர் எம்பாவாய். 18

உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலம்என்று
அங்கப் பழஞ்சொல் புதுக்கும்எம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கொன் றுரைப்போம்கேள்
எங்கொங்கை நின்னன்பர் அல்லார்தோள் சேரற்க
எங்கை உனக்கல்லா தெப்பணியும் செய்யற்க
கங்குல் பகல்எங்கண் மற்றொன்றுங் காணற்க
இங்கிப் பரிசே எமக்கெங்கோன் நல்குதியேல்
எங்கெழிலென் ஞாயி றெமக்கேலோர் எம்பாவாய். 19

போற்றி அருளுகநின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுகநின் அந்தமாஞ் செந்தளிர்கள்
போற்றிஎல் லாவுயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம்
போற்றிஎல் லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றிஎல் லாவுயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
போற்றிமால் நான்முகனும் காணாத புண்டரிகம்
போற்றிமால் உய்யஆட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழிநீ ராடேலோர் எம்பாவாய். 20

திருச்சிற்றம்பலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# கௌரி காப்பு



## விநாயகர் துதி

முன்னின்று செய்யுள் முறையாய்ப் புனைவதற்கு
என்னின் றருள்செய் எலிவா கனப்பிள்ளாய்
சொற்குற்ற மொடு பொருட்குற்றம் சோர்வு தரும்
எற்குற்றமும் வாராமற்கா.

## வேண்டுதற் கூறு

காப்பெடுக்க வந்தேனே கௌரியம்மாள் தாயாரே
காத்தென்னைத் தேற்றிடுவாய் காளிமகா தேவியரே
காலமெல்லாம் நின்னரிய காப்பெடுத்தே வாழ்ந்திடுவேன்
எண்ணும் கருமம் இனிதாக முடித்திடுவாய்
பண்ணும் வினையாவும் பனிபோலப் போக்கிடுவாய்
உண்ணும் உணவாக உயிரினுக் குயிராக
என்றும் இருந்தே எனைக் காத்துவந்திடுவாய்
காடும் கடந்து வந்தேன் மலையும் கடந்து வந்தேன்
காளிமகா தேவியரே காப்பெனக்குத் தந்திடுவாய்
சூலம் கொண்டவளே சுந்தர முகத்தவளே
அரியை உடையவளே அம்மாகாளி தாயே
கொடியமகி ஷாசுரனைக் கூறு போட்டவளே
அசுரக் குணம்யாவும் அழிக்கும் சுடர்கொடியே
சிவனை நினைத்தல்லோ சீர்விரதம் நீயிருந்தாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரனை நினைத்தல்லோ பதிவிரதம் நீயிருந்தாய்
அரனை நினைத்தல்லோ அம்மா நீ நோன்பிருந்தாய்
சங்கரனை எண்ணியல்லோ சங்கரி நீ நோன்பிருந்தாய்
ஐங்கரனைப் பெற்றவளே அன்றுநீ நோன்பிருந்தாய்
விரதத்தைக் கண்டே விழித்தான் சிவனவனும்
அம்மா உனையணைத்தே அருள்மாரி பொழிந்தானே
வகைபாற்றுப் படலமிதை வழிவழியாக் காட்டிடுவீர்
நெறியறியாத் திகைப்போர்க்கு நெறிமுறையைக் காட்டிடுவாய்
காப்பைப் புனைந்துவிடு காலபயம் ஓட்டிவிடு
நூலைப் புனைந்துவிடு நுண்ணறிவை ஊட்டிவிடு
வல்லமையைத் தந்துவிடு வையகத்தில் வாழவிடு
காளிமகா தேவியரே காப்பருளும் தேவியரே
காப்பைப் புனைபவளே காப்பாய் இருப்பவளே
நாடு செழிக்கவென்றே நற்காப்பு அருளுமம்மா
வீடு செழிக்கவென்றே விழைகாப்பு அருளுமம்மா
நல்வாழ்வு வாழ்வதற்கு நறுங்காப்பு அருளுமம்மா
அல்லல் அறுப்பதற்கே அருட்காப்பு அருளுமம்மா
பிள்ளை அற்றவர்க்குப் பெருங்காப்பு அருளுமம்மா
பூமணியே மாமணியே புனிதவதி தாயவளே
நான் விரும்பும் காப்பை நலமுடனே தாருமம்மா
கல்வி சிறப்பதற்குக் கலைமகளே வாருமம்மா
செல்வம் சிறப்பதற்கு திருமகளே வாருமம்மா
வீரம் சிறப்பதற்கு வீரசக்தி தாருமம்மா
பாட்டுடைத் தேவியரே பராசக்தி தாயவளே!
ஏட்டுடைத் தலைவியரே எல்லாம்மிகு வல்லமையே
காப்பெடுக்க வந்தேனம்மா கனிவுடனே பாருமம்மா
பால்பழங்கள் வெற்றிலைகள் பல்வகைத் திரவியங்கள்
நானுமக்குத் தாறேனம்மா நயந்தென்னைக் காருமம்மா
காளிமகா தேவியரே காசினிக்கு வித்தவளே
வித்தை விதைப்பவளே வினைகாக்கும் காப்பவளே
எத்தால் வாழ்ந்திடுவோம் எல்லாம் உமதருளே
காசினியில் வேற்றுமையை கணப்பொழுதே மாற்றிவிட்டால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏசலின்றி வாழ்ந்திடுவோம் ஏத்துபுகழ் தேவியளே
காப்னெக்குப் போட்டுவிட்டால் கல்மனது இளகிவிடும்
ஞானம் பெருகிவரும் நல்வாழ்வு மிகுந்து வரும்
தொடர்ந்து அணிவோர்க்கு தொட்டதெல்லாம் ஜெயமாகும்
இசைந்து அணிவோர்க்கு நல்லதெல்லாம் பெருகிவரும்
நாள்கள் கோள்களெல்லாம் நலமுடனே இணைந்துவரும்
சந்தனச் சாந்தவளே சங்கரியே சாந்தினியே
குங்குமப் பூச்சவளே குலக்கொழுந்தே கௌரியம்மா
காப்புக் கட்டிவிட்டுக் கடமை முடிந்ததென்று
ஏப்பம் மிகவிட்டு என்றுமே இருந்தறியேன்
நாளும் பொழுதிலெல்லாம் நறுங்காப்புக் கட்டதனில்
பூவும் நீருமிட்டுப் போற்றி வணங்கிடுவேன்
காலைப் பொழுதெழுந்து காப்பதனில் விழித்திடுவேன்
ஞானச் செழுஞ்சுடரே காளியுன்னைக் காணுகின்றேன்
காப்பெனக்குக் கையிலுண்டு கடமைகளைச் செய்திடுவேன்
ஏய்ப்பவரைக் கண்டால் எரிமலைபோற் கனன்றிடுவேன்
தீமைச் செயலெதுவும் தெரியாது செய்கையிலே
காப்புக் கையிலிருந்து கண்திறந்து காட்டும்படி
சொல்லற் கரிதான சோதிமிகு காப்பதனை
இருபது நாள்வரையில் இசைவோடு விரதமிரு
பக்தி மனதுடனே பரவி யணிவோர்க்கு
சித்தியெல் லாந்தருவாள் சீர்பெருகு கௌரியவள்
முத்திக்கு வழியுமுண்டு முக்கால உணர்வுமுண்டு
எச்சகத்தி லோர்களெல்லாம் ஏற்றியெமைப் போற்றிடுவர்
அச்சக்தி எல்லாம் அருள்வாள் கௌரியவள்
கௌரிக் காப்பதனைக் காலம் தவறாமல்
முறையாய் அணிந்துவர முன்வினைகள் நீங்கிவர
ஞானம் ஓங்கிவர நல்லறிவு துலங்கிவர
தேவிமகா காளியரே தெவிட்டாத தீங்கனியே
காளியாய் வந்தமர்ந்த கௌரியே காப்பருளும்.

முற்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# கந்தசஷ்டி கவசம்



## நேரிசை வெண்பா

துதிப்போர்க்கு வல்வினைபோம் துன்பம்போம் நெஞ்சில்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் – கதித்து(து) ஓங்கும்
நிட்டையுங் கைகூடும், நிமலர் அருள்கந்தர்
சஷ்டி கவசம் தனை.

## குறள் வெண்பா

அமரர் இடர் தீர அமரம் புரிந்த
குமரனடி நெஞ்சே குறி.

## நூல்

ஷஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவுஞ் செங்கதிர் வேலோன்
பாதம் இரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி யாட
மைய நடனஞ் செய்யும் மயில் வாகனனார்
கையில்வே லால் எனைக் காக்கவென் றுவந்து
வரவர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா எண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவண பவனார் சடுதியில் வருக
ரஹண பவச ரரரர ரரர
ரிஹண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரவண வீரா நமோ நம
நிபவ சரவண வீரா நமோ நம
வசர வணபவ வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை ஆளும் இளையோன் கையில்
பன்னிரண் டாயுதம் பாசஅங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தென்னைக் காக்க வேலோன் வருக
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையுங் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொளி யையும்
நிலைபெற் றென்முன் நித்தமும் ஒளிரும்
சண்முகன் நீயும் தனியொளி யொவ்வும்
குண்டலியாம் சிவ குகன்தினம் வருக
ஆறு முகமும் அணிமுடி ஆறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ்வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகு குண்டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூசணமும் பதக்கமும் தரித்து
நன்மணி பூண்ட நவரத்தின மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயிறு உந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்தினம் பதித்த நற்சீ ராவும்
இருதொடை அழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகன
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடுடு டுடுடுடு டுடுடுடு டுடுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்தனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனென்று
உன்திரு வடியை உறுதியென் றெண்ணும்
என்தலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அருள்வேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வேல் இரண்டு கண்ணினைக் காக்க
விதிசெவி யிரண்டும் வேலவர் காக்க
நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்ன மிரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்தின வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவே லிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை அழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்பெண் குறிகளை அயில்வேல் காக்க
பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வல்வேல் காக்க
பணைத்தொடை யிரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிரல் அடியினை அருள்வேல் காக்க
கைகள் ளிரண்டும் கருணைவேல் காக்க
முன்னை யிரண்டும் முரண்வேல் காக்க
பின்கை யிரண்டும் பின்னவள் இருக்க
நாவில் சரஸ்வதி நற்றுணையாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பால் நாடியை முனைவேல் காக்க
எப்பொழுதும் எனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க
ஏமத்திற் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீங்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியினில் நோக்க
தாக்க தாக்க தடையறத் தாக்க
பார்க்க பார்க்க பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்ல பூதம் வலாட்டிகப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழைக்கடை முனியும்
கொள்ளி வாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமராக் கதரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசிகாட் டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலும் இருட்டிலும் எதிர்ப்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோடனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டாளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட
ஆனை யடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைகள் என்பும்
நகமும் மயிரும் நீண்முடி மண்டையும்
பாவைக ளுடனே பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டிய பாவையும் ஒட்டிய செருக்கும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதுமஞ் சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூ தாளெனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட் டலறி மதிகெட் டோடப்
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுடன் அங்கம் கதறிடக் கட்டு
கட்டி உருட்டு கால்கை முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு முழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில் செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலரி
தணலெரி தணலெரி தணலதுவாக
விடுவிடு வேலை வெருண்டது வோடப்
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித்தொடர்தோடத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடுவிட விஷங்கள் கடித்துய ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதுடன் இறங்க
ஒளிப்பும் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதஞ் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலைசயங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரீதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத்து அரணை பருஅரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லாதோட நீயெனக் கருள்வாய்
ஈரேழ் உலகமும் எனக்குறவாக
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்கா
மண்ணா ளரசரும் மகிழ்ந்துற வாகவும்
உன்னைத் துதிக்க உன்திரு நாமம்
சரவண பவனே சைலொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவமொழி பவனே
அரிதிரு மருகா அமரா வதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வே லவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை யழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்காமத்துறை கதிர்வேல் முருகா
பழநிப் பதிவாழ் பால குமாரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின் மாமலையுறும் செங்கல்வராயா
சமரா புரிவாழ் சண்முகத் தரசே
காரார்குழலாள் கலைமகள் நன்றாய்
என்நா இருக்க யானுனைப் பாட
எனைத்தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


பாடினேன் ஆடினேன் பரவசமாக
ஆடினேன் நாடினேன் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னரு ளாக
அன்புடன் இரி அன்னமுஞ் சொர்ணமும்
மெத்தமெத் தாக வேலாயுதனார்
சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசம்
வாழ்க வாழ்க என் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை யடியேன் எத்தனை செயினும்
பெற்றவன் நீ குரு பொறுப்பதுன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவளாமே
பிள்ளையென் றன்பாய் பிரிய மளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட அருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவராயன் பகர்ந்ததை
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசாரத்துடன் அங்கந் துலக்கி
நேச முடனொரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டி கவசம் மிதனைச்
சிந்தை கலங்காது தியானிப்பவர்கள்
ஒரு நாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே செபித்து உகந்து நீறணிய
அட்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்னர் எண்மர் செயல தருளுவர்
மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளுமீ ரெட்டாய் வாழ்வார்
கந்தர்கை வேலாம் கவசத் தடியை
வழியாக் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லாதவரைப் பொடிபொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறிந்தென துள்ளம் அட்டலட் சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்துணவாகச்
சூரபத் மாவைத் துணிந்தகை யதனால்
இருபத் தேழ்வர்க்கு உவந்தமு தளித்த
குருபரன் பழநிக் குன்றினி லிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத் தடுத்தாட் கொள் என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவா போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ்கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேளே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோ ரரசே
மயில்நட மிடுவோய் மலரடி சரணம்
சரணஞ் சரணஞ் சரவண பவஓம்
சரணஞ் சரணஞ் சண்முகா சரணம்.

கந்தசஷ்டி கவசம் முற்றிற்று.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகலகலாவல்லிமாலை



ஆய கலைகள் அறுபத்து நான்கினையும்
ஏய வுணர்விக்கு மென்னம்மை – தூய
வுருப் பளிங்கு போல் வாளென் உள்ளத்தின் உள்ளே
யிருப்பளிங்கு வாரா திடர்.

படிக நிறமும் பவளச் செவ்வாயும்
கடிகமழ்பூந் தாமரை போற் கையுந் – துடியிடையும்
அல்லும் பகலும் அனவரத முந்துதித்தால்
கல்லுஞ்சொல் லாதோ கவி.

வெள்ளைக் கலையுடுத்து வெள்ளைப் பணிபூண்டு
வெள்ளைக் கமலத்தே வீற்றிருப்பாள் – வெள்ளை
அரியாசனத்தில் அரசரோடு டென்னைச்
சரியா சனம் வைத்த தாய்.

வெண்டாமரைக்கன்றி நின்பதந்
தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாதுகொ
லோசக மேழுமளித்
துண்டா னுறங்க வொழித்தான்
பித்தாக வுண்டாக்கும் வண்ணம்
கண்டான் சுவைக்கொள் கரும்பே
சகல கலாவல்லியே.

நாடும் பொருட்சுவை சொற்சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்வாய்
பங்க யாசனத்திற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடும் பசும்பொற் கொடியே
கனத்தனக் குன்றுமைம்பாற்
காடுஞ் சுமக்குங் கரும்பே
சகல கலாவல்லியே.

அளிக்குஞ் செழுந்தமிழ்த் தெள்ளமு
தார்ந்துன் னருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொலோ
வுளங்கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக் கண்டு
களிக்கும் கலாப மயிலே
சகல கலாவல்லியே.

தூக்கும் பனுவற் றுறைதோய்ந்த
கல்வியுஞ் சொற்சுவைதோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்
வாய் வடநூற்கடலும்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமுந்
தொண்டர் செந்நாவினின்று
காக்குங் கருணைக் கடலே
சகல கலாவல்லியே.

பஞ்ச பிதந்தரு செய்யபொற்
பாத பங்கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென்
னேநெடுந் தாட்கமலத்
தஞ்சத் துவச முயர்த்தோன்
செந்நாவு மகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய்
சகல கலாவல்லியே.

பண்ணும் பரதமும் கல்வியும்
தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல்
காயெழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலுங்
கனலும்வெங் காலுமன்பர்
கண்ணுங் கருத்து நிறைந்தாய்
சகல கலாவல்லியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாட்டும் பொருளும் பொருளாற்
பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைகணல்
காயுளங்கொண்டு தொண்டர்
தீட்டுங் கலைத்தழிழ்த் தீம்பா
லமுதந் தெளிக்கும் வண்ணங்
காட்டும்வெள் ளோதிமப் பேடே
சகல கலாவல்லியே.

சொல்லிற் பனமு மவதானமுங்
கவிசொல்லவல்ல
நல்வித்தை யுந்தந் தடிமைகொள்
வாய்நளி னாசனஞ்சேர்
செவ்விக் கரிதென் றொருகால
முஞ்சிதை யாமைநல்குங்
கல்விப் பெருஞ்செல்வப் பேறே
சகல கலாவல்லியே.

சொற்கும் பொருட்டு முயிராமெய்ஞ்
ஞானத்தின்றோற்ற மென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர்
யார்நிலந் தோய்புழைக்கை
நற்குஞ் சரத்தின் பிடியோ
டரசன்ன நாணநடை
கற்கும் பதாம்புயத் தாயே
சகல கலாவல்லியே.

மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னருமென்
பண்கண் டளவிற் பணியச் செய்வாய்
படைப் போன்முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண்
டேனும் விளம்பிலுன்போற்
கண்கண்ட தெய்வ முளதோ
சகல கலாவல்லியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்ரீ அபிராமிப்பட்டர் அருளியது

# அபிராமி அம்மைப் பதிகம்

### முதலாவது பதிகம்

### காப்பு

தூயதமிழ்ப் பாமாலை சூட்டுதற்கு மும்மதம், நால்வாய்,
ஐங் கரன்தாள் வழுத்துவாம் - நேயர்நிதம்
எண்ணும் புகழ்க்கடவூர் எங்கள்அபி ராமவல்லி
நண்ணும்பொற் பாதத்தில் நன்கு

### நூல்

கலையாத கல்வியும், குறையாத வயதும்,
ஓர் கபடு வாராத நட்பும், கன்றாத வளமையும்,
குன்றாத இளமையும், கழுபிணி இலாத உடலும்,
சலியாத மனமும், அன்பு அகலாத மனைவியும்,
தவறாத சந்தானமும், தாழாத கீர்த்தியும்,
மாறாத வார்த்தையும், தடைகள் வாராத கொடையும்,
தொலையாத நிதியமும், கோணாத கோலும்,
ஒரு துன்பம் இல்லாத வாழ்வும்,
துய்ய நின்பாதத்தில் அன்பும் உதவிப்,
பெரிய தொண்டரொடு கூட்டு கண்டாய்
அலைஆழி அறி துயில்கொள் மாயனது தங்கையே!
ஆதி கடவூரின் வாழ்வே!
அமுதீசர் ஒரு பாகம் அகலாத சுகபாணி!
அருள் வாமி! அபிராமியே! (1)

கார் அளக பந்தியும், பந்தியின் அலங்கலும்,
கரிய புருவச் சிலைகளும்,
கர்ண குண்டலமும், மதி முக மண்டலமும்,
நுதல் கத்தூரிப் பொட்டும் இட்டுக்,
கூர் அணிந்திடு விழியும், அமுத மொழியும்,
சிறிய கொவ்வையின் கனி அதரமும்,
குமிழ் அனைய நாசியும், குந்த நிகர்
தந்தமும் கோடு சோடான களமும்,
வார் அணிந்து இறுமாந்த வனமுலையும்,
மேகலையும், மணி நூபுரப் பாதமும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்து எனது முன் நின்று, மந்தகாசமுமாக
வல் வினையை மாற்றுவாயே
ஆர மணி வானில் உறை தாரகைகள் போல
நிறை ஆதி கடவூரின் வாழ்வே!
அமுதீசர் ஒரு பாகம் அகலாத சுகபாணி!
அருள் வாமி! அபிராமியே! (2)

மகர வார் குழை மேல் அடர்ந்து, குமிழ் மீதினில் மறைந்து,
வாளைத் துறந்து, மைக் கயலை வென்ற நின் செங்கமல
விழி அருள் வரம் பெற்ற பேர்கள் அன்றோ-
செகம் முழுதும் ஒற்றைத் தனிக் குடை கவித்து,
மேல் சிங்க ஆதனத்தில் உற்றுச், செங்கோலும்,
மனு நீதி முறைமையும் பெற்று, மிகு திகிரி உலகு ஆண்டு, பின்பு
புகர் முகத்து ஐராவதப் பாகர் ஆகி, நிறை புத்தேளிர்
வந்து போற்றிப் போக தேவேந்திரன் எனப் புகழ
விண்ணில் புலோமசையொடும் சுகிப்பர்
அகர முதல் ஆகி வளர் ஆனந்த ரூபியே!
ஆதி கடவூரின் வாழ்வே!
அமுதீசர் ஒரு பாகம் அகலாத சுகபாணி!
அருள் வாமி! அபிராமியே! (3)

மறி கடல்கள் ஏழையும், திகிரி இரு நான்கையும்,
மாதிரக் கரி எட்டையும், மா நாகம் ஆனதையும்,
மா மேரு என்பதையும், மா கூர்மம் ஆனதையும், ஓர்
பொறி அரவு தாங்கிவரு புவனம் ஈர் ஏழையும்,
புத்தேளிர் கூட்டத்தையும், பூமகளையும், திகிரி மாயவனையும்,
அரையில் புலி ஆடை உடையானையும்,
முறை முறைகளாய் ஈன்ற முதியவளாய்ப்,
பழைமை முறைமை தெரியாத நின்னை-
மூவுலகில் உள்ளவர்கள் வாலை என்று அறியாமல்
மொழிகின்றது ஏது சொல்வாய்?
அறிவு நிறை விழுமியர்தம் ஆனந்த வாரியே!
ஆதி கடவூரின் வாழ்வே!
அமுதீசர் ஒரு பாகம் அகலாத சுகபாணி!
அருள் வாமி! அபிராமியே! (4)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாடாமல் உயிர் எனும் பயிர் தழைத்து ஓங்கி வர,
அருள் மழை பொழிந்தும்,
இன்ப வாரிதியிலே நின்னது அன்பு எனும்
சிறகினால் வருந்தாமலே அணைத்துக்,
கோடாமல் வளர் சிற்றெறும்பு முதல் குஞ்சரக்
கூட்டம் முதலான சீவ கோடிகள் தமக்குப் புசிக்கும்
புசிப்பினைக் குறையாமலே கொடுத்தும்,
நீடாழி உலகங்கள் யாவையும் நேயமாய் நின்
உதர பந்தி பூக்கும் நின்மலீ அகிலங்களுக்கு அன்னை
என்று ஓதும் நீலி என்று ஓதுவாரோ?
ஆடாய நான்மறையின் வேள்வியால் ஓங்கு புகழ்
ஆதி கடவூரின் வாழ்வே!
அமுதீசர் ஒரு பாகம் அகலாத சுகபாணி!
அருள் வாமி! அபிராமியே! (5)

பல் குஞ்சரம் தொட்டு எறும்பு கடையானது ஒரு
பல் உயிர்க்கும், கல் இடைப் பட்ட தேரைக்கும்,
அன்று உற்பவித்திடு கருப் பை உறு சீவனுக்கும்,
மல்கும் சராசரப் பொருளுக்கும், இமையாத வானவர்
குழாத்தினுக்கும், மற்றும் ஒரு மூவருக்கும், யாவருக்கும்,
அவரவர் மனச் சலிப்பு இல்லாமலே,
நல்கும் தொழில் பெருமை உண்டாய் இருந்தும்,
மிகு நவ நிதி உனக்கு இருந்தும்,
நான் ஒருவன் வறுமையில் சிறியன் ஆனால்,
அந் நகைப்பு உனக்கே அல்லவோ?
அல் கலந்து, உம்பர் நாடு அளவு எடுக்கும் சோலை,
ஆதி கடவூரின் வாழ்வே!
அமுதீசர் ஒரு பாகம் அகலாத சுகபாணி!
அருள் வாமி! அபிராமியே! (6)

நீடு உலகங்களுக்கு ஆதாரமாய் நின்று, நித்தமாய்,
முத்தி வடிவாய், நியமமுடன் முப்பத்து இரண்டு
அறம் வளர்க்கின்ற நீ மனைவியாய் இருந்தும்,-
வீடு வீடுகள் தோறும் ஓடிப் புகுந்து, கால் வேசற்று,
இலச்சையும் போய், வெண் துகில் அரைக்கு அணிய
விதியற்று, நிர்வாண வேடமும் கொண்டு, கைக்கு ஓர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓடு ஏந்தி, நாடு எங்கும் உள்ளம் தளர்ந்து நின்று,
உன்மத்தன் ஆகி, அம்மா! உன் கணவன் எங்கெங்கும் ஐயம்
புகுந்து, ஏங்கி, உழல்கின்றது ஏது சொல்வாய்?
ஆடு கொடி மாடமிசை மாதர் விளையாடி வரும்
ஆதி கடவூரின் வாழ்வே!
அமுதீசர் ஒரு பாகம் அகலாத சுகபாணி!
அருள் வாமி! அபிராமியே! (7)

ஞானம் தழைத்து, உன் சொருபத்தை அறிகின்ற
நல்லோர் இடத்தினில் போய், நடுவினில் இருந்து, உவந்து,
அடிமையும் பூண்டு, அவர் நவிற்றும் உபதேசம் உட்கொண்டு,
ஈனம்தனைத் தள்ளி எனது, நான் எனும் மானம்
இல்லாமலே துரத்தி, இந்திரிய வாயில்களை இறுகப் புதைத்து,
நெஞ்சு இருள் அற, விளக்கு ஏற்றியே-
வான் அந்தம் ஆன விழி அன்னமே! உன்னை என்
அகத் தாமரைப் போதிலே வைத்து, வேறே கவலை அற்று,
மேல் உற்ற பர வசம் ஆகி, அழியாதது ஓர்
ஆனந்த வாரிதியில் ஆழ்கின்றது என்று காண்?
ஆதி கடவூரின் வாழ்வே?
அமுதீசர் ஒரு பாகம் அகலாத சுகபாணி!
அருள் வாமி! அபிராமியே! (8)

சலதி உலகத்தில் சராசரங்களை ஈன்ற தாய் ஆகில்,
எனக்குத் தாய் அல்லவோ? யான் உன் மைந்தன் அன்றோ?
எனது சஞ்சலம் தீர்த்து, நின்றன்
முலை சுரந்து ஒழுகு பால் ஊட்டி, என் முகத்தை உன்
முந்தானையால் துடைத்து, மொழிகின்ற மழலைக்கு
உகந்துகொண்டு, இள நிலா முறுவல் இன்புற்று, அருகில் யான்
குலவி விளையாடல் கொண்டு, அருள் மழை பொழிந்து,
அங்கை கொட்டி, வா என்று அழைத்துக்,
குஞ்சர முகன், கந்தனுக்கு இளையன் என்று எனைக்
கூறினால், ஈனம் உண்டோ?
அலை கடலிலே தோன்றும் ஆராத அமுதமே!
ஆதி கடவூரின் வாழ்வே!
அமுதீசர் ஒரு பாகம் அகலாத சுகபாணி!
அருள் வாமி! அபிராமியே! (9)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைப் போது கொண்டு, உன் பதப் போது தன்னில் கணப்
போதும் அர்ச்சிக்கிலேன் கண் போதினால், உன் முகப் போது
தன்னை, யான் கண்டு தரிசனை புரிகிலேன்
முப் போதில் ஒரு போதும், என் மனப் போதிலே முன்னி,
உன் ஆலயத்தின் முன் போதுவார் தமது பின் போத நினைகிலேன்
மோசமே போய் உழன்றேன்
மைப் போதகத்திற்கு நிகர் எனப் போது எரு-
மைக் கடா மீது ஏறியே, மா கோர காலன் வரும்போது,
தமியேன் மனம் கலங்கித் தியங்கும்
அப் போது, வந்து உன் அருட்போது தந்து அருள்
ஆதி கடவூரின் வாழ்வே!
அமுதீசர் ஒரு பாகம் அகலாத சுகபாணி!
அருள் வாமி! அபிராமியே! (10)

மிகையும் துரத்த, வெம் பிணியும் துரத்த, வெகுளி
ஆனதும் துரத்த, மிடியும் துரத்த, நரை திரையும் துரத்த,
மிகு வேதனைகளும் துரத்தப்,
பகையும் துரத்த, வஞ்சனையும் துரத்தப், பசி என்பதும்
துரத்தப், பாவம் துரத்தப், பதி மோகம் துரத்தப்,
பல காரியமும் துரத்த,
நகையும் துரத்த, ஊழ் வினையும் துரத்த, என் நாளும் துரத்த,
வெகுவாய் நா வறண்டு ஓடிக், கால் தளர்ந்திடும் என்னை
நமனும் துரத்துவானோ?
அகில உலகங்கட்கும் ஆதார தெய்வமே!
ஆதி கடவூரின் வாழ்வே!
அமுதீசர் ஒரு பாகம் அகலாத சுகபாணி!
அருள் வாமி! அபிராமியே! (11)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிஷாசுரமர்த்தினி ஸ்லோகம்

அயிகிரி நந்தினி நந்தித மேதினி
விச்வ வினோதினி நந்தநுதே
கிரிவர விந்த்ய சிரோதி நிவாஸினி
விஷ்ணு விலாஸினி ஜிஷ்ணுநுதே
பகவதி ஹே சிதிகண்ட குடும்பினி
பூரிகுடும்பினி பூரிக்ருதே
ஜய ஜய ஹே மஹிஷாஸுர மர்தினி
ரம்ய கபர்தினி சைலஸுதே (1)

ஸுரவர வர்ஷிணி துர்தர தர்ஷிணி
துர்முக மர்ஷிணி ஹர்ஷரதே
த்ரிபுவன போஷிணி சங்கர தோஷிணி
கில்பிஷ மோஷிணி கோஷரதே
தனுஜ நிரோஷிணி திதிஸுத ரோஷிணி
துர்மத சோஷிணி ஸிந்துஸுதே
ஜய ஜய ஹே மஹிஷாஸுர மர்தினி
ரம்ய கபர்தினி சைலஸுதே (2)

அயி ஜகதம்ப மதம்ப
கதம்பவன ப்ரிய வாஸினி ஹாஸரதே
சிகரி சிரோமணி துங்க ஹிமாலய
ச்ருங்க நிஜாலய மத்யகதே
மதுமதுரே மதுகைடப கஞ்ஜினி
கைடப பஞ்ஜினி ராஸரதே
ஜய ஜய ஹே மஹிஷாஸுர மர்தினி
ரம்ய கபர்தினி சைலஸுதே (3)

அயி சதகண்ட விகண்டித ருண்ட
விதுண்டித சுண்ட கஜாதிபதே
ரிபுகஜ கண்ட விதாரண சண்ட
பராக்ரம சுண்ட ம்ருகாதிபதே
நிஜபுஜ தண்ட நிபாதித கண்ட
விபாதித முண்ட பதாதிபதே
ஜய ஜய ஹே மஹிஷாஸுர மர்தினி
ரம்ய கபர்தினி சைலஸுதே (4)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அயிரண துர்மத சத்ரு வதோதித
துர்தர நிர்ஜர சக்தி ப்ருதே
சதுர விசார துரீண மஹாசிவ
தூதக்ருத ப்ரமதாதிபதே
துரித துரீஹ துராசய துர்மதி
தானவ தூத க்ருதாந்தமதே
ஜய ஜய ஹே மஹிஷாஸுர மர்த்தினி
ரம்ய கபர்தினி சைலஸுதே (5)

அயி சரணாகத வைரிவ தூவர
வீர வராபய தாயகரே
த்ரிபுவன மஸ்தக சூலவிரோதி
சிரோதி க்ருதாமல சூலகரே
துமிதுமி தாமர துந்துபி நாத
மஹோ முகரீக்ருத திங்மகரே
ஜய ஜய ஹே மஹிஷாஸுர மர்த்தினி
ரம்ய கபர்தினி சைலஸுதே (6)

அயி நிஜஹுங்க்ருதி மாத்ர நிராக்ருத
தூம்ர விலோசன தூம்ரசதே
ஸமரவிசோஷித சோணிதபீஜ
ஸமுத்பவ சோணித பீஜலதே
சிவசிவ சும்ப நிசும்ப மஹாஹவ
தர்ப்பித பூத பிசாசரதே
ஜய ஜய ஹே மஹிஷாஸுர மர்த்தினி
ரம்ய கபர்தினி சைலஸுதே (7)

தனுரனு ஸங்க ரணக்ஷண ஸங்க
பரிஸ்ஃபுர தங்க நடத்கடகே
கனக பிசங்க ப்ரிஷத்க நிஷங்க
ரஸத்பட ச்ருங்க ஹதாபடுகே
க்ருத சதுரங்க பலக்ஷிதிரங்க
கடத்பஹுரங்க ரடத்படுகே
ஜய ஜய ஹே மஹிஷாஸுர மர்த்தினி
ரம்ய கபர்தினி சைலஸுதே (8)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸுரலலனா தததேயி ததேயி க்ருதாபினயோதர ந்ருத்யரதே
க்ருத குகுத குகுதோ கடதாதி கதால குதூஹல கானரதே
துதுகுட துக்குட திந்திமித த்வனி தீர ம்ருதங்க நினாதரதே
ஜய ஜய ஹே மஹிஷாஸுரமர்த்தினி ரம்யகபர்த்தினி லைஸுதே (9)

ஜய ஜய ஜப்ய ஜயே ஜய சப்த
பரஸ்துதி தத்பர விச்வ நுதே
ஜணஜண ஜிஞ்ஜிமி ஜிங்க்ருத நூபுர
ஸிஞ்ஜித மோஹித பூதபதே
நடித நடார்த்த நடீ நட நாயக
நாடித நாட்ய ஸுகான ரதே
ஜய ஜய ஹே மஹிஷாஸுர மர்த்தினி
ரம்ய கபர்த்தினி சைலஸுதே (10)

அயி ஸுமன: ஸுமன: ஸுமன:
ஸுமன: ஸுமனோஹர காந்தியுதே
ச்ரித ரஜனீ ரஜனீ ரஜனீ
ரஜனீ ரஜனீகர வக்த்ர வ்ருதே
ஸுநயன விப்ரமர ப்ரமர ப்ரமர
ப்ரமர ப்ரமரா திபதே
ஜய ஜய ஹே மஹிஷாஸுர மர்த்தினி
ரம்ய கபர்த்தினி சைலஸுதே (11)

ஸஹித மஹாஹவ மல்ல மதல்லிக
மல்லி தரல்லக மல்லரதே
விரசித வல்லிக பல்லி கமல்லிக
ஜில்லிக பில்லிக வர்கவ்ருதே
சிதக்ருத ஃபுல்லஸ முல்லஸி தாருண
தல்லஜ பல்லவ ஸல்லலிதே
ஜய ஜய ஹே மஹிஷாஸுர மர்த்தினி
ரம்ய கபர்த்தினி சைலஸுதே (12)

அவிரலகண்ட கலன்மத மேதுர
மத்த மதங்கஜ ராஜபதே
த்ரிபுவன பூஷண பூதகலாநிதி
ரூப பயோநிதி ராஜஸுதே
அயிஸுத தீஜன லாலஸ மானஸ
மோஹன மன்மத ராஜஸுதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜய ஜய ஹே மஹிஷாஸுர மர்த்தினி
ரம்ய கபர்த்தினி சைலஸுதே (13)

கமல தலாமல கோமல காந்தி
கலா கலிதாமல பாலலதே
ஸகல விலாஸ கலாநிலய க்ரம
கேலிசலத்கல ஹம்சகுலே
அலிகுல சங்குல குவலய மண்டல
மௌலிமிலத் பகுலாலிகுலே
ஜய ஜய ஹே மஹிஷாஸுர மர்த்தினி
ரம்ய கபர்த்தினி சைலஸுதே (14)

கர முரலீரவ வீஜித கூஜித
லஜ்ஜித கோகில மஞ்ஜுமதே
மிலித புலிண்ட மனோஹர குஞ்ஜித
ரஞ்சித சைல நிகுஞ்ஜகதே
நிஜகுணபூத மஹா சபரீகண ஸத்குண ஸம்ப்ருத கேலிதலே
ஜய ஜய ஹே மஹிஷாசுர மர்த்தினி
ரம்யக பர்த்தினி சைலஸுதே (15)

கடிதடபீத துகூல விசித்ர
மயூக திரஸ்க்ருத சந்த்ரருசே
ப்ரணத ஸுராஸுர மௌலி மணிஸ்ஃபுர
தன்சுல ஸன்னக சந்த்ரருசே
ஜிதகனகாசல மௌலி பதோர்ஜித
நிர்பர குஞ்ஜர கும்பகுசே
ஜய ஜய ஹே மஹிஷாஸுர மர்த்தினி
ரம்ய கபர்த்தினி சைலஸுதே (16)

விஜித ஸஹஸ்ர கரைக ஸஹஸ்ர
கரைக ஸஹஸ்ர கரைகநுதே
க்ருத ஸுர தாரக ஸங்கர தாரக
ஸங்கர தாரக ஸ்னுஸுதே
ஸுரத சமாதி ஸமான ஸமாதி
ஸமாதி ஸமாதி ஸுஜாதரதே
ஜய ஜய ஹே மஹிஷாஸுர மர்த்தினி
ரம்ய கபர்த்தினி சைலஸுதே (17)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதகமலம் கருணா நிலயே
வரிவஸ்யதியோ ஸ்னுதினம் ஸுசிவே
அயி கமலே கமலா நிலயே
கமலா நிலய ஸகதம் நபவேத்
தவ பதமேவ பரம்பதமித்
யனு சீலயதோ மமகிம் ந சிவே
ஜய ஜய ஹே மஹிஷாஸுர மர்திநி
ரம்ய கபர்திநி சைலஸுதே (18)

கனகல ஸத்கல ஸிந்துஜலைரனு
ஸிஞ்சிநுதே குண ரங்கபுவம்
பஜதி ஸகிம் நசசீ குசகும்ப
தடீ பரிரம்ப ஸுகானுபவம்
தவ சரணம் சரணம் கரவாணி
நதாமரவாணி நிவாஸிசிவம்
ஜய ஜய ஹே மஹிஷாஸுர மர்திநி
ரம்ய கபர்திநி சைலஸுதே (19)

தவ விமலேந்து குலம் வதனேந்துமலம்
ஸகலம் நனு கூலயதே
கிமு புரஹூத புரீந்துமுகீ
ஸுமுகீபிரஸௌ விமுகீ க்ரியதே
மமது மதம் சிவநாமதனே
பவதீ க்ருபயா கிமுத க்ரியதே
ஜய ஜய ஹே மஹிஷாஸுர மர்திநி
ரம்ய கபர்திநி சைலஸுதே (20)

அயி மயி தீனதயாலு தயா
க்ருபயைவ த்வயா பவித்வயமுமே
அயி ஜகதோ ஜனனீ க்ருபயாஸி
யதாஸி ததாஸனு மிதாஸிரதே
யதுசித மத்ர பவத்யுரரீ
குருதா துருதா பமபாகுருதே
ஜய ஜய ஹே மஹிஷாஸுர மர்திநி
ரம்ய கபர்திநி சைலஸுதே (21)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ ஆஞ்சநேய கவசம் (அனுமன் கவசம்)

## காப்பு

மன்னுயிர் காத்து மனம் நிறைந்த அனுமன்
தன்னிருதாள் போற்றித் தஞ்சக் கவசம் பொன்னாக
என்னாவிலுதிக்க ஏரம்பக் கணபதியே
உன்னருளால் உயர்த்து

## கவசம்

மூவுலகும் நலம் சூழ அருளிடும்
தேவகுமாரனே, தஞ்சம்! தஞ்சம்!
மூண்டிடும் வினைகளைத் தாற்றும் முன்னவா,
முழுவதுமா யெனை ஆண்டிட வேண்டினேன்!

மூலப்பரம்பொருள் என் மனம் காக்க,
முகத்தொடு முழுமெய் அருள்காக்க,
சூலத்தினாலெந்தன் செவி காக்க,
சூட்சுமமாகவே சுந்தரம் காக்க

வாயுபுத்திரன் எந்தன் வாய் காக்க,
வானவனே எந்தன் வதனம் காக்க,
நேயனே எந்தன் நெற்றி காக்க,
நிம்மதியளித்தெந்தென் நாசி காக்க

நீளவுயர்ந்தோனே நா காக்க,
பாசமறுப்பவனே பல் காக்க,
புகலளிப்போனே புருவம் காக்க,
போற்றுகிறேன் கண்பாவை காக்க!

கூறிய நகங்கொண்டு கூந்தல் காக்க,
குணவானே என்றன் கழுத்தைக் காக்க,
மாசறுக்கும் மணியே மார்பு காக்க,
தேசுறு தோளினைத் தாங்கிக் காக்க

பக்திக்கருள்பவனே பிடரி காக்க,
பாற்கடலோன் அடிமை உதடு காக்க,
ஈகைதிறத்தோனென்றன் இடை காக்க,
முழுமுதற்பொருளென்றன் முதுகு காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாதில் வல்லோனே வயிற்றைக் காக்க,
வடிவழகினன் என் நாபி காக்க,
கதை எடுப்பவன் கைகளைக் காக்க,
கண்ணனின் அடியவன் கருத்தினைக் காக்க

வீம சகோதரன் விரல்களைக் காக்க,
நமனை அழித்தவன் நகங்களைக் காக்க,
நாராயண தூதன் நரம்புகளைக் காக்க,
நம்பிடும் பாலனை நாயகன் காக்க

பிரும்மகுலத்தவன் பிட்டம் காக்க,
குன்றினை எடுத்தவன் குணத்தைக் காக்க,
செந்துவர் வாயினன் செழிதொடை காக்க,
மூலவன் மூட்டினை முன்னின்று காக்க

கருணாமூர்த்தி என் கால்களைக் காக்க,
உரமிகு தோலினன் உள்ளம் காக்க,
காரிருள் வண்ணன், தொண்டன் காக்க,
கருத்துடன் மனமும் கவர்ந்தவன் காக்க

கதிரொளி வானரன் கணைக்கால் காக்க,
“பதி”யென் பாதம் இரந்தும் காக்க,
வானரவேந்தன் கால் விரலினைக் காக்க,
வதனம் சிவந்தவன் வல்லமை காக்க

குலநலம் காப்பவன் குருதியைக் காக்க,
குணமிகு சீலன் எம் குடியினைக் காக்க,
மேன்மை பெருகிட பாரதம் காக்க,
மேதினி செழித்திட மாருதி காக்க

மக்களைக் காத்து மனங்களில் உறைபவன்
மகேசவடிவினன் வல்லமை காக்க,
சிக்கலறுத்துச் சீலம் அளித்தெமைச்
சிறப்புடன் காப்பவன் சீர்தாள் வாழ்க!

மன்னவன் மாருதி! மனங்கவர் சாரதி!
மாதா சீதை யாவர்க்கும் மங்களம்!
சித்தம் கட்டியென் சிரத்தை யாவுங்கொண்டு
முத்தி வேண்டுகிறேன்! அருள்வாய்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பொற்சுண்ணம்

முத்துநல் தாமம்பூ மாலைதூக்கி
முளைக்குடந் தூபம்நல் தீபம்வைம்மின்
சத்தியுஞ் சோமியும் பார்மகளும்
நாமக ளோடுபல் லாண்டிசைமின்
சித்தியுங் கௌரியும் பார்ப்பதியும்
கங்கையும் வந்து கவரிகொண்மின்
அத்தன்ஐ யாறன்அம் மானைப்பாடி
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 1

பூவியல் வார்சடை எம்பிராற்குப்
பொற்றிருச் சுண்ணம் இடிக்கவேண்டும்
மாவின் வடுவகி ரன்னகண்ணீர்
வம்மின்கள் வந்துடன் பாடுமின்கள்
கூவுமின் தொண்டர் புறநிலாமே
குனிமின் தொழுமின்எங் கோன்எங்கூத்தன்
தேவியுந் தானும்வந் தெம்மையாளச்
செம்பொன்செய் சுண்ணம் இடித்துநாமே. 2

சுந்தர நீறணிந் தும்மெழுகித்
தூயபொன் சிந்தி நிதிநிரப்பி
இந்திரன் கற்பகம் நாட்டியெங்கும்
எழிற்சுடர் வைத்துக் கொடியெடுமின்
அந்தரர் கோன்அயன் தன்பெருமான்
ஆழியான் நாதன்நல் வேலன்தாதை
எந்தரம் ஆளுமை யாள்கொழுநற்கு
ஏய்ந்தபொற் சுண்ணம் இடித்துநாமே. 3

காசணி மின்கள் உலக்கையெல்லாம்
காம்பணி மின்கள் கறையுரலை
நேச முடைய அடியவர்கள்
நின்று நிலாவுக என்றுவாழ்த்தித்
தேசமெல் லாம்புகழ்ந் தாடுங்கச்சித்
திருவேகம் பன்செம்பொற் கோயில்பாடிப்
பாச வினையைப் பறித்துநின்று
பாடிப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறுகெடுப் பார்அய னும்மரியும்
அன்றிமற் றிந்திர னோடமரர்
நறுமுறு தேவர் கணங்களெல்லாம்
நம்மிற்பின் பல்லதெ டுக்கவொட்டோம்
செறிவுடை மும்மதில் எய்தவில்லி
திருவேகம் பன்செம்பொற் கோயில்பாடி
முறுவற்செவ் வாயினீர் முக்கண் அப்பற்கு
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 5

உலக்கை பலஓச்சு வார்பெரியர்
உலகமெ லாம்உரல் போதாதென்றே
கலக்க அடியவர் வந்துநின்றார்
காண உலகங்கள் போதாதென்றே
நலக்க அடியோமை ஆண்டுகொண்டு
நாண்மலர்ப் பாதங்கள் சூடத்தந்த
மலைக்கு மருகனைப் பாடிப்பாடி
மகிழ்ந்துபொற் சுண்ணம் இடித்துநாமே. 6

சூடகந் தோள்வளை ஆர்ப்பஆர்ப்பத்
தொண்டர் குழாமெழுந் தார்ப்பஆர்ப்ப
நாடவர் நந்தம்மை ஆர்ப்பஆர்ப்ப
நாமும் அவர்தம்மை ஆர்ப்பஆர்ப்பப்
பாடக மெல்லடி யார்க்குமங்கை
பங்கினன் எங்கள் பராபரனுக்கு
ஆடக மாமலை அன்னகோவுக்கு
ஆடப் பொற்சுண்ணம் இடித்துநாமே. 7

வாட்டடங் கண்மட மங்கைநல்லீர்
வரிவளை ஆர்ப்பவண் கொங்கை பொங்கத்
தோட்டிரு முண்டந் துதைந்திலங்கச்
சோத்தெம்பி ரான்என்று சொல்லிச்சொல்லி
நாட்கொண்ட நாண்மலர்ப் பாதங்காட்டி
நாயிற்க டைப்பட்ட நம்மையிம்மை
ஆட்கொண்ட வண்ணங்கள் பாடிப்பாடி
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 8



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வையகம் எல்லாம் உரலதாக
மாமேரு என்னும் உலக்கைநாட்டி
மெய்யெனும் மஞ்சள் நிறையஅட்டி
மேதகு தென்னன் பெருந்துறையான்
செய்ய திருவடி பாடிப்பாடிச்
செம்பொன் உலக்கை வலக்கைபற்றி
ஐயன் அணிதில்லை வாணனுக்கே
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 9

முத்தணி கொங்கைகள் ஆடஆட
மொய்குழல் வண்டினம் ஆடஆடச்
சித்தஞ் சிவனொடும் ஆடஆடச்
செங்கயற் கண்பனி ஆடஆடப்
பித்தெம் பிரானொடும் ஆடஆடப்
பிறவி பிறரொடும் ஆடஆட
அத்தன் கருணையொ டாடஆட
ஆடப்பொற்சுண்ணம் இடித்துநாமே. 10

மாடு நகைவாள் நிலாவெறிப்ப
வாய்திறந் தம்பவ ளந்துடிப்பப்
பாடுமின் நந்தம்மை ஆண்டவாறும்
பணிகொண்ட வண்ணமும் பாடிப்பாடித்
தேடுமின் எம்பெரு மானைத்தேடி
சித்தங் களிப்பத் திகைத்துத் தேறி
ஆடுமின் அம்பலத் தாடினானுக்கு
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 11

மையமர் கண்டனை வானநாடர்
மருந்தினை மாணிக்கக் கூத்தன் தன்னை
ஐயனை ஐயர்பிரானை நம்மை
அகப்படுத் தாட்கொண்டருமைகாட்டும்
பொய்யர்தம் பொய்யனை மெய்யர்மெய்யைப்
போதரிக் கண்ணிணைப் பொற்றொடித்தோள்
பையர வல்குல் மடந்தைநல்லீர்
பாடிப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 12



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மின்னிடைச் செந்துவர் வாய்க்கருங்கண்
வெண்ணகைப் பண்ணமர் மென்மொழியீர்
என்னுடை ஆரமுது எங்கள் அப்பன்
எம்பெரு மான்இம வான்மகட்குத்
தன்னுடைக் கேள்வன் மகன்தகப்பன்
தமையன்எம் ஐயன் தாள்கள்பாடிப்
பொன்னுடைப் பூண்முலை மங்கைநல்லீர்
பொற்றிருச் சுண்ணம் இடித்துநாமே. 13

சங்கம் அரற்றச் சிலம்பொலிப்பத்
தாழ்குழல் சூழ்தரு மாலையாடச்
செங்கனி வாய்இத ழுந்துடிப்பச்
சேயிழை யீர்சிவ லோகம்பாடிக்
கங்கை இரைப்ப அராஇரைக்குங்
கற்றைச் சடைமுடி யான்கழற்கே
பொங்கிய காதலிற் கொங்கை பொங்கப்
பொற்றிருச் சுண்ணம் இடித்துநாமே. 14

ஞானக் கரும்பின் தெளிவைப்பாகை
நாடற் கரிய நலத்தை நந்தாத்
தேனைப் பழச்சுவை ஆயினானைச்
சித்தம் புகுந்து தித்திக்கவல்ல
கோனைப் பிறப்பறுத் தாண்டுகொண்ட
கூத்தனை நாத்தழும் பேறவாழ்த்திப்
பானல் தடங்கண் மடந்தைநல்லீர்
பாடிப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 15

ஆவகை நாமும்வந் தன்பர்தம்மோடு
ஆட்செயும் வண்ணங்கள் பாடிவிண்மேல்
தேவர்க னாவிலுங் கண்டறியாச்
செம்மலர்ப் பாதங்கள் காட்டுஞ் செல்வச்
சேவகம் ஏந்திய வெல்கொடியான்
சிவபெரு மான்புரஞ் செற்றகொற்றச்
சேவகன் நாமங்கள் பாடிப்பாடிச்
செம்பொன்செய் சுண்ணம் இடித்துநாமே. 16



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேனக மாமலர்க் கொன்றைபாடிச்
சிவபுரம் பாடித் திருச்சடைமேல்
வானக மாமதிப் பிள்ளைபாடி
மால்விடை பாடி வலக்கையேந்தும்
ஊனக மாமழுச் சூலம்பாடி
உம்பரும் இம்பரும் உய்யஅன்று
போனக மாகநஞ் சுண்டல்பாடிப்
பொற்றிருச் சுண்ணம் இடித்துநாமே. 17

அயன்தலை கொண்டுசெண் டாடல்பாடி
அருக்கன் எயிறு பறித்தல்பாடி
கயந்தனைக் கொன்றுரி போர்த்தல்பாடிக்
காலனைக் காலால் உதைத்தல்பாடி
இயைந்தன முப்புரம் எய்தல்பாடி
ஏழை அடியோமை ஆண்டுகொண்ட
நயந்தனைப் பாடிநின் றாடி யாடி
நாதற்குச் சுண்ணம் இடித்துநாமே. 18

வட்ட மலர்க்கொன்றை மாலைபாடி
மத்தமும் பாடி மதியும்பாடிச்
சிட்டர்கள் வாழுந்தென் தில்லைபாடிச்
சிற்றம்ப லத்தெங்கள் செல்வம்பாடிக்
கட்டிய மாசுணக்கச்சைப் பாடிக்
கங்கணம் பாடிக் கவித்தகைம்மேல்
இட்டுநின் றாடும் அரவம்பாடி
ஈசற்குச் சுண்ணம் இடித்துநாமே. 19

வேதமும் வேள்வியும் ஆயினார்க்கு
மெய்ம்மையும் பொய்ம்மையும் ஆயினார்க்குச்
சோதியு மாய்இருள் ஆயினார்க்குத்
துன்பமு மாய்இன்பம் ஆயினார்க்குப்
பாதியு மாய்முற்றும் ஆயினார்க்குப்
பந்தமு மாய்வீடும் ஆயினார்க்கு
ஆதியும் அந்தமும் ஆயினார்க்கு
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 20



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பட்டினத்தார் அருளிய

### உடற்கூற்றுவண்ணம்

ஒரு மடமாது மொருவனுமாகி யின்பசுகந்தரு
மன்பு பொருந்தி யுணர்வு கலங்கி யொழுகிய விந்து
வூறுசுரோணித மீ துகலந்து

பனியிலோர்பாதி சிறுதுளிமாது பண்டியில் வந்து
புகுந்து திரண்டு பதுமவரும்பு கமடமிதென்று
பார்வைமெய் வய் செவி கால்கைகளென்ற

உருவமுமாகி வுயிர்வளர்மாத மொன்பதும் மொன்று
நிறைந்து மடந்தை யுதரமகன்று புவியில் விழுந்து
யோகமும் வாரமு நாளுமறிந்து

மகளிர்கள்சேனை தரவணையாடை மண்படவுந்தியு
தைந்து கவிழ்ந்து மடமயில் கொங்கை யமுதமருந்தி
யோரறி வீரறி வாகிவளர்ந்து

ஒளி நகையூற விதழ்மட வாரு முவந்து முகந்திட
வந்து தவழ்ந்து மடியிலிருந்து மழலை மொழிந்து
வாவிரு போவென நாமம் விளம்ப

உடை மணியாடை யரைவடமாட வுண்பவர்திண்பவர்
தங்களொடுண்டு தெருவிலிருந்து புழுதியளைந்து
தேடிய பாலரொ டோடி நடந்து
அஞ்சு வயதாகி விளையாடியே.

உயர்தரு ஞான குருவுபதேச முத்தமிழின்கலை
யுங்கரைகண்டு வளர்பிறையென்று பலரும் விளம்ப
வாழ்பதினாறு பிராயமும் வந்து

மயிர் முடி கோதி யறுபத நீல வண்டிமிர்தண்டொடை கொண்டைபுனைந்து
மணிபொனிலங்கு பணிகளணிந்து
மாகதர்போகதர் கூடிவணங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதன சொரூப னிவனெனமோக மங்கையர் கண்டு
மருண்டு திரண்டு வரிவிழிகொண்டு சுழியவெறிந்து
மாமயில் போலவர் போவது கண்டு

மனது பொறாம லவர்பிறகோடி மங்கல செங்கல
சந்திகழ் கொங்கை மருவ மயங்கி யிதழமுதுண்டு
தேடிய மாமுதல் சேரவழங்கி

ஒருமுதலாகிய முது பொருளா யிருந்ததனங்களும்
வம்பிலிழந்து மதனசுகந்த விதனமிதென்று
வாலிப கோலமும் வேறு பிரிந்து

வளமையுமாறி யிளமையுமாறி வன்பல்விழுந்திரு
கண்களிரண்டு வயது முதிர்ந்து நரைதிரைவந்து
வாதவிரோத குரோதமடைந்து
செங்கையினிலோர் தடியுமாகியே

வருவதுபோவ தொருமுது கூனு மந்தியெனும்படி
குந்தி நடந்து மதியுமழிந்து செவிநிமிர் வந்த
வாயறியாமல் விடாமன் மொழிந்து

துயில்வருநேர மிருமல் பொறாது தொண்டையு நெஞ்சு
முலர்ந்த வறண்டு துகிலுமிழந்து சுணையுமழிந்து
தோகையர் பாலர்கள் கோரணி கொண்டு

கலியுக மீதி லிவர்மரியாதை கண்டிடுமென்பவர்
சஞ்சலமிஞ்ச கலகலவென்று மலசலம் வந்து
கால்வழிமேல்வழி சாரநடந்து

தெளிவுமிராம லுரைதடுமாறி சிந்தையு நெஞ்சமு
முலைந்து மருண்டு திடமுமுலைந்து மிகவுமலைந்து
தேறிநலாதர வேதென நொந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறையவன் தேனெழுதியவாறு வந்ததுகண்டமு
மென்று தெளிந்து இனியெனகண்ட மினியென தொந்த
மேதினிவாழ்வுநி வாதினி நின்ற

கடன்முரைபேசு மெனவுரைநாவு றங்கிவிழுந்துகை
கொண்டு மொழிந்து கடைவழிகஞ்சி யொழுகிடவந்து
பூதமுநாலு சுவாசமும் நின்று நெஞ்சு தடுமாறி வரு நேரமே

வளை பிறை போல வெயிறுமுரோம முந்சடையும்சிறு
குஞ்சியும்விஞ்ச மனது மிருண்ட வடிவுமி லங்க
மாமலை போல் யம தூதர்கள் வந்து

வலைகொடுவீசி யுயிர் கொடுபோக மைந்தரும் வந்து
குனிந்தழநொந்து மடியில்விழுந்து மனைவி புலம்ப
மாழ்கினரேயிவர் காலமறிந்து

பழையவர்காணு மெனுமயலார்கள் பஞ்சு பறந்திட
நின்றவர்பந்த ரிடுமெனவந்து பறையிடமுந்த
வேபிணம்வேக விசாரியுமென்று

பலரையுமேவி முதியவர்தாமிருந்த சவங்கமு
வுஞ்சிலரென்று பணிதுறொங்கல் களபமணிந்து
பாவகமே செய்து நாறுமுடம்பை

வரிசை கெடாம லெடுமனவோடி வந்திளமைந்தர்
குனிந்து சுமந்து கடுகி நடந்து சுடலையடைந்து
மானிட வாழ்வென வாழ்வென நொந்து

விறகிடமூடி யழல்கொடுபோட வெந்துவிழுந்து
முறிந்துநிணங்க ளுருகியெலும்பு கருகியடங்கி
யோர்பிடி நீறுமு லாதவுடம்பை
நம்புமடியேனை யினியாளுமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டினத்தார் பாடல்கள்

ஐயிரண்டு திங்களா யங்கமெலா நொந்து பெற்றுப்
பையலென்ற போதே பரிந்தெடுத்துச் – செய்யவிரு
கைப்புறுத்தி லேந்திக் கனகமுலை தந்தாளை
எப்பிறப்பிற் காண்பேன் இனி?

முந்தித் தவங்கிடந்து முந்நூறு நாள் சுமந்து
அந்திபக லாயென்னை யாதரித்துத் – தொந்தி
சரியச் சுமந்து பெற்ற தாயார் தமக்கோ?
எரியத் தழல் மூட்டுவேன்?

வட்டிலுந் தொட்டிலும் மார்மேலும் தோள்மேலும்
கட்டிலிலும் வைத்தென்னைக் காதலித்து – முட்டச்
சிறகிலிட்டு காப்பாற்றிச் சீராட்டும் தாய்க்கோ
வறகிலிட்டுத் தீ மூட்டுவேன்?

நொந்து சுமந்து பெற்று நோவாம லேந்திமுலை
தந்து வளர்த்தெடுத்துத் தாழாமே – அந்திபகல்
கையிலே கொண்டேன்னைக் காப்பாற்றுந்தாய் தனக்கோ
மெய்யிலே தீ மூட்டுவேன்?

அரிசியோ நானிடுவே னாத்தாள் தனக்கு
வரிசையிட்டுப் பார்த்து மகிழாமல் – உருகியுள்ள
தேனே! அமிர்தமே! செல்வத் திரவியப்பூ
மானே! எனவழைத்த வாய்க்கு?

அள்ளி இடுவ தரிசியே? தாய் தலைமேற்
கொள்ளிதனை வைப்பேனோ? கூசாமல் – மெள்ள
முகமேல் முகம் வைத்து முத்தாடி யென்றன்
மகனே! எனவழைத்த வாய்க்கு?

முன்னை இட்ட தீ முப்புரத்திலே
பின்னை இட்ட தீ தென் இலங்கையிலே
அன்னை இட்ட தீ அடி வயிற்றிலே
யானும் இட்ட தீ மூள்க மூள்கவே!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேகுதே தீயதினிலே வெந்து பொடி சாம்பல்
ஆகுமே பாவியென் ஐயகோ! – மாகக்
குருவி பறவாமல் கோதாட்டி என்னைக்
கருதி வளர்த்தெடுத்த கை.

வெந்தாளோ சோணகிரி வித்தகா! நின்பதத்தில்
வந்தாளோ! என்னை மறந்தாளோ – சந்ததமும்
உன்னையே நோக்கி உகந்துவரம் கிடந்துனன்
தன்னையே ஈன்றெடுத்த தாய்!

வீற்றிருந்தாள் அன்னை வீதிதனில் இருந்தாள்!
நேற்றிருந்தாள் இன்று வெந்து நீறானாள் – பால் தெளிக்க
எல்லோரும் வாருங்கள் ஏதென்று இரங்காமல்
எல்லாம் சிவமயமே யாம்!

நெருப்பான மேனியர் செங்கோட்டில் ஆத்தி நிழல் அருகே
இருப்பார் திருவுளம் எப்படியோ இன்னம்என்னை அன்னைக்
கருப்பசாயக் குழிக்கேதள்ளுமோ கண்ணன் காணரிய
திருப்பாதமே தருமோ தெரியாது சிவன்செயலே!

பத்தும் புகுந்து பிறந்து வளர்ந்து பட்டாடைசுற்றி,
முத்தும் பவளமும் பூண்டுஓடி ஆடி முடிந்தபின்பு
செத்துக் கிடக்கும் பிணத்தருகே இனிச் சாம்பிணங்கள்
கத்துங் கணக்கென்ன? காண் கயிலாபுரிக் காளத்தியே!

கையொன்று செய்ய, விழியொன்று நாடக் கருத்தொன்று எண்ணப்
பொய்யொன்று வஞ்சக நாவொன்று பேசப் புலால் கமழும்
மெய்யொன்று சாரச் செவியொன்று கேட்க விரும்பும்யான்
செய்கின்ற பூசைஎவ் வாறுகொள்வாய்? வினை தீர்த்தவனே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# கோளறு திருப்பதிகம்

கிரக பீடையில் இருந்து நீங்குவதற்காக திருஞானசம்பந்த சுவாமிகள் அருளியது.

திருச்சிற்றம்பலம்

வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள்கங்கை முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள்செவ்வாய் புதன்வியாழன் வெள்ளி
சனிபாம்பு இரண்டும் உடனே
ஆசறு நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே.

என்பொடு கொம்பொடாமை இவைமார்பு இலங்க
எருதேறி ஏழை உடனே
பொன்பொதி மத்தமாலை புனல்சூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்
ஒன்பது ஒன்றொடுஏழு பதினெட்டொடு ஆறும்
உடனாய நாள்கள் அவைதாம்
அன்பொடு நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே.

உருவளர் பவளமேனி ஒளி நீறணிந்து
உமையோடும் வெள்ளை விடைமேல்
முருகலர் கொன்றைதிங்கண் முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
திருமகள் கலையதூர்தி சயமாது பூமி
திசை தெய்வமான பலவும்
அருநெதி நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதிநுதல் மங்கையோடு வடபால் இருந்து
மறையோதும் எங்கள் பரமன்
நதியொடு கொன்றைமாலை முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
கொதியுறு காலன்அங்கி நமனோடு தூதர்
கொடு நோய்களான பலவும்
அதிகுணம் நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே

நஞ்சணி கண்டன்எந்தை மடவாள் தனோடும்
விடையேறு நங்கள் பரமன்
துஞ்சிருள் வன்னிகொன்றை முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
வெஞ்சின அவுணரோடு உருமிடியும் மின்னும்
மிகையான பூதம் அவையும்
அஞ்சிடு நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே

வாள்வரிய தளதாடை வரி கோவணத்தர்
மடவாள் தனோடு உடனாய்
நாள்மலர் வன்னிகொன்றை நதிசூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்
கோளரி உழுவையோடு கொலையானை கேழல்
கொடு நாகமோடு கரடி
ஆளரி நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே

செப்பிள முலைநல்மங்கை ஒரு பாகமாக
விடையேறு செல்வன் அடைவார்
ஒப்பிள மதியும்அப்பும் முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெப்பொடு குளிரும்வாத மிகையான பித்தும்
வினையான வந்து நலியா
அப்படி நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே

வேள்பட விழிசெய்துஅன்று விடைமேல் இருந்து
மடவாள் தனோடும் உடனாய்
வாள்மதி வன்னிகொன்றை மலர்சூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்
ஏழ்கடல் சூழ்இலங்கை அரையன் தனோடும்
இடரான வந்து நலியா
ஆழ்கடல் நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே

பலபல வேடமாகும் பரனாரி பாகன்
பசுவேறும் எங்கள் பரமன்
சலமகளோடு எருக்கு முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
மலர்மிசையோன் மால் மறையோடு தேவர்
வரு காலமான பலவும்
அலைகடல் மேருநல்ல அவைநல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே

கொத்தலர் குழலியோடு விசையற்கு நல்கு
குணமாய வேட விகிர்தன்
மத்தமும் மதியும் நாகம் முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
புத்தரோடு அமணைவாதில் அழிவிக்கும் அண்ணல்
திருநீறு செம்மை திடமே
அத்தகு நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவக்கிரக தோஷம் நீங்க...
# நவக்கிரக துதி

## ஞாயிறு



சீலமாய் வாழ சீரருள் புரியும்
ஞாலம் புகழும் ஞாயிறே போற்றி
சூரியா போற்றி சுந்தரா போற்றி
வீரியா போற்றி வினைகள் களைவாய்

## திங்கள்



எங்கள் குறைகள் எல்லாம் தீர்க்கும்
திங்களே போற்றி திருவருள் புரிவாய்
சந்திரா போற்றி சற்குணா போற்றி
சங்கடம் தீர்க்கும் சதுரா போற்றி

## செவ்வாய்



சிறுப்புறு மணியே செவ்வாய்த் தேவே
குறைவிலா தருள்வாய் குணமுடன் வாழ
மங்கலச் செவ்வாய் மலரடி போற்றி
ஆங்காரஹனே அவதிகள் நீக்கு

## புதன்



இதமுற வாழ இன்னல்கள் நீக்கும்
புதபகவானே பொன்னடி போற்றி
பதம் தந்து ஆள்வாய் பண்ணொலியானே
உதவியாய் அருள்ளும் உத்தமா போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வியாழன்



குணமிகு வியாழ குருபகவானே
மணமுள்ள வாழ்வு மகிழ்வுடன் அருள்வாய்
பிரகஸ்பதி வியாழ பர குரு நேசா
கிரக தோஷமின்றிக் கடாட்சித் தருள்வாய்

## வெள்ளி



சுக்கிர மூர்த்தி சுகமிக ஈவாய்
வக்கிரமின்றி வரமிகத் தருவாய்
வெள்ளிச் சுக்கிர வித்தக வேந்தே
அள்ளிக் கொடுப்பாய் அடியார்க்கு அருளே

## சனி



சங்கடம் தீர்க்கும் சனிபகவானே
மங்களம் பொங்க மனம் வைத்தருள்வாய்
சச்சரவின்றி சனீஸ்வரத் தேவா சாகாநெறியில்
இச்செகம் வாழ இன்னருள் தா தா

## ராகு



அரவெனும் ராகு ஐயனே போற்றி
கரவாதருள்வாய் கஷ்டங்கள் நீக்கு
ஆக அருள்புரி அனைத்திலும் வெற்றி
இராகு கனியே ரம்மியா போற்றி

## கேது



கேது தேவே கீர்த்தித் திருவே
பாதம் போற்றி பாபம் தீர்ப்பாய்
வாதம் வம்பு வழக்குகள் இன்றி
கேதுத் தேவே கேண்மையாய் ரக்ஷ!

**இந்த நவக்கிரக ஸ்தோத்திரம் சொல்லி ஒவ்வொரு கிரகத்திற்கும் ஒரு மலர் வீதம் ஒன்பது மலரை இடவும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்து

திருச்சிற்றம்பலம்

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல்லாம்அரன் நாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே

என்றும் இன்பம் பெருகும் இயல்பினால்
ஒன்று காதலித்து உள்ளமும் ஓங்கிட
மன்று ளார்அடி யாரவர் வான்புகழ்
நின்றது எங்கும் நிலவி உலகெலாம்

வையம் நீடுக மாமழை மன்னுக
மெய் விரும்பிய அன்பர் விளங்குக
சைவ நன்னெறிதான் தழைத்தோங்குக
தெய்வ வெண் திருநீறு சிறக்கவே

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான் மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக வுலக மெல்லாம்.

பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர்கோன் கழல் போற்றி!
ஆழிமிசைக் கல்மிதப்பில் அணைந்த பிரான் அடிபோற்றி!
வாழிதிரு நாவலூர் வன்தொண்டர் பதம் போற்றி!
ஊழிமலி திருவாத வூரர் திருத்தாள் போற்றி!

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனையடி சாஸ்திரம்
## வீட்டின் நீள அகல பலன்கள்

| | |
|---|---|
| 6 அடி - நன்மை | 29 அடி - சுற்றப்பெருக்கு |
| 7 அடி - மத்திமம் | 30 அடி - நோய் |
| 8 அடி - இராச்சியம் | 31 அடி - தரித்திரம் |
| 9 அடி - கேடு | 32 அடி - இழந்த பொருள் எய்தும் |
| 10 அடி - பாக்கியம் | 33 அடி - இரு மனைவியர் |
| 11 அடி - புத்திரலாபம், செல்வம் | 34 அடி - குடிகேடு |
| 12 அடி - பிள்ளையின்மை | 35 அடி - ஜீவன விருத்தி |
| 13 அடி - மரணம் | 36 அடி - சுகமுடமை |
| 14 அடி - பகை | 37 அடி - பசு விருத்தி |
| 15 அடி - துன்பம் | 38 அடி - நினைத்தது கெடுதி |
| 16 அடி - செல்வம் | 39 அடி - இராச சன்மானம் |
| 17 அடி - நாளுக்கு நாள் ஆக்கம் | 40 அடி - மனைவி நாசம் |
| 18 அடி - நஷ்டம் | 41 அடி - பாக்கியம் |
| 19 அடி - புத்திரர் கவலை | 42 அடி - கீர்த்தி |
| 20 அடி - இனம் சேரும் | 43 அடி - இராச தண்டம் |
| 21 அடி - ஆடு, மாடு இறக்கும் | 44 அடி - அங்கவீனம் |
| 22 அடி - சோபனமுண்டு | 45 அடி - சற்புத்திரர் |
| 23 அடி - பிணி | 46 அடி - பிசாசு வாசம் |
| 24 அடி - மனைவி மரணம் | 47 அடி - சூனியப்பீடை |
| 25 அடி - திருமகள் வாழும் | 48 அடி - தீயினால் கேடு |
| 26 அடி - செல்வப்பேறு | 49 அடி - மலடாவான் |
| 27 அடி - அரசாளும் | 50 அடி - சர்வாதிகாரி |
| 28 அடி - ஆயுள் விருத்தி | |

**அறைகளின் நீள அகலங்கள் உள்ளுக்குள் கணக்கிட வேண்டும். அளவுப் பிரமாணத்துக்கு மிஞ்சி வீடு கட்டினால் துன்பமே.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நன்றி நவிலல்

எங்கள் தாயார்

## திருமதி.மார்க்கண்டு.சொர்ணலட்சுமி அவர்கள்

இறைபதமடைந்த செய்திகேட்டு ஓடிவந்து எங்கள் துயரில் பங்கெடுத்து எமக்கு ஆறுதல் கூறிய உற்றார், உறவினர், அயலவர் நண்பர்களுக்கும், தொலைபேசியிலும் முகநூலிலும் அனுதாபம் தெரிவித்தோருக்கும் நன்றியைத் தெரிவிக்கின்றோம். அன்னாருக்கான கண்ணீர் அஞ்சலிப் பதாகைகள் வெளிட்ட கனகராயன்குளம் மகா வித்தியாலயப் பாடசாலை அபிவிருத்திச் சங்கம், தரணிக்குளம் கணேஷ் வித்தியாலயம், புளியங்குளம் இந்துக்கல்லூரிப் பாடசாலைச் சமூகம், கல்மடு ஸ்ரீ டிப்போ பிள்ளையார் பரிபாலன சபை, புளியங்குளம் கிராம அபிவிருத்திச் சங்கம், புளியங்குளம் இந்துக்கல்லூரிப் பழைய மாணவர் சங்கம், தமிழ்மொழியும் இலக்கியமும் மதிப்பீட்டுக் குழு-வவுனியா ஆகியோருக்கும் எங்கள் குடும்பத்தின் சார்பாகக் நன்றியைத் தெரிவிக்கின்றோம். உணவு, சிற்றுண்டி, தேநீர் வழங்கியோருக்கும் நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

தாயார் நோயுற்ற வேளையில் வைத்திய ஆலோசனை வழங்கிய Dr.சுதாகரனுக்கு நன்றி. இறுதி நேரத்தில் ஆலோசனை கூறிய வைத்தியர் ப.சத்தியநாதனுக்கும், மரணத்தை உறுதிப்படுத்திய Dr.சி.நிருசனுக்கும் எங்கள் குடும்ப சார்பில் நன்றிகள்.

ஈமைக்கிரிக்கைகளைத் தொடர்ந்து நடந்த இரங்கலுரைக்குத் தலைமைதாங்கி உரையாற்றிய ஓய்வுநிலை கோட்டக்கல்விப் பணிப்பாளர். MP.நடராசா அவர்களுக்கும், இரங்கலுரை நிகழ்த்திய வவுனியா வடக்கு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் திரு.ச.தணிகாசலம் அவர்களுக்கும்.சட்டத்தரணி திரு.க.தயாபரனுக்கும்,ஓய்வுநிலை ஆசிரியர். திருமதி.இந்துமதி ஜெயசுந்தரம் அவர்களுக்கும், ஓய்வுநிலை ஆசிரியர் திரு.கதிர்காம சேகரத்திற்கும் எங்கள் குடும்பத்தின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

எங்கள் தாயாரின் இறுதிப்பயணத்தில் உதவிய அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் எங்கள் குடும்பத்தின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்



நன்றி

இங்ஙனம்

**குடும்பத்தினர்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ ராமஜெயம் ஸ்ரீ ராமஜெயம் ஸ்ரீ ராமஜெயம்



அன்னகை மோதிரத்தை அளித்தலும்
மணியைத் தந்து இந் நெடும்
கடலை நீயும் எங்கனம் கடந்தாய்
என்ன உன்னத நெடிய மாலாய்
உயர்ந்தெளுந் தடங்கி நின்று
மன்னுத்தாய் ஆசி பெற்ற
மாருதி பாதம் போற்றி !

வாணி கணனிப் பதிப்பகம். தொ.பே: 024 2223658
85, கந்தசுவாமி கோவில் வீதி, வவுனியா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org